


# தண்ணீரைச் சேமிப்போம்!

கவிஞர் இராம. பரஞ்சோதி



நீரின்றி அமையாதாம் உலகம் என்றே
நிறைமொழியில் வள்ளுவரும் கூறி உள்ளார்,
பாரிலுள்ள உயிரினங்கள் இனிது வாழல்
பருவமழை பொழிவதாலே என்றல் உண்மை,
ஊருணியில் நீர்நிறைந்தே இருந்து விட்டால்
ஊர்மக்கள் தண்ணீர்ப்பஞ் சமின்றி வாழ்வர்,
காரணமின் றி 'நீரினையும் செலவு செய்தால்'
கடுந்துன்பம் பின்னாளில் அடைவர் மக்கள்.

மழைநீரைச் சேமித்து வைக்க வென்றே
மாமன்னன் கரிகாலன் அணையைக் கட்டி,
உழவினையே நல்முறையில் செய்ய வைத்தே
உணவளித்தான் தன்நாட்டு மக்க ளுக்கே,
மழைநீரும் தேங்குகின்ற குளங்கள் குட்டை
மற்றும்ஏ ரியெல்லாமே இருந்து நாட்டில்,
உழவுத்தொ ழிலும்நன்றாய் நடந்த காலம்
உண்டெனவே நாமெல்லாம் அறிவோம் நன்றே.

இன்றைக்கோ நீர்நிலைகள் அழிந்து போக
எங்கெங்கும் கட்டிடங்கள் எழவே கண்டோம்,
நன்முறையில் மழைபெய்தும் சேமிக் காமல்
நச்சுடனே கடலினிலே சேரக் கண்டோம்,
எந்நாளும் குடிநீரும் கிடைத்தல் இன்றி
ஏங்குகின்றார் மக்களெல்லாம் இந்த நாட்டில்,
பொன்போல் மழைநீரைச் சேமித் திட்டால்
பொதுமக்கள் துன்பமின்றி வாழ லாமே.

பொய்யர்கள் நீர்நிலைகள் சொந்த மென்று
புகுகின்ற நிலைமையினை ஒழிக்க வேண்டும்,
பெய்கின்ற மழைநீரை மண்ணில் சேர்க்கும்
பெருந்திட்டம் மக்களெல்லாம் ஏற்க வேண்டும்,
செய்யவேண்டும் மழைநீரின் சேமிப் பையே
சிறுவீடு பெரும்கட்டி டங்கள் எல்லாம்,
செய்திடுவோம் நீர்செலவைச் சிக்க னத்தில்
சேதமின்றி எந்நாளும் நாமும் நன்றே.



# மனிதன் எப்படி படுத்து உறங்க வேண்டும்?

## சித்தர்களின் விளக்கம்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமான ஒன்று உறக்கம் எனும் தூக்கம். இது உடல் நலத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மனிதனின் வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கு தூக்கத்தில்தான் கழிகின்றது. உடலிலுள்ள கோடிக்கணக்கான செல்களை தினமும் புதுப்பிக்கவும், உடலின் சோர்வு நீங்கி புத்துணர்வு பெறவும், உடல் வளர்ச்சி (குறிப்பிட்ட வயது வரை) பெறவும் தூக்கம் இன்றியமையாததாக உள்ளது.

இரவில் தூங்கும்போதுதான் உடலின் வளர்ச்சி அதிகரிக்கின்றது என்று இன்றைய அறிவியலாளர்கள் கூறுகின்றனர். தூங்குவதைப் பற்றியும் அதில் உள்ள அறிவியல் உண்மைகளையும் சித்தர் பெருமக்கள் தங்கள் நூல்களில் வடித்துள்ளனர்.

தூங்குவதற்கு ஏற்ற காலம் இரவு மட்டும்தான் என்பது இயற்கை வகுத்துள்ள விதிகளில் ஒன்றாகும். பூமியின் தட்ப வெப்பநிலைகள் மாறி இரவில் குளிர்ச்சி பொருந்திய சூழ்நிலைதான் தூங்குவதற்கு ஏற்ற காலமாகும். ஆனால் இன்றைய நாகரீக உலகில் இணையதள நிறுவனங்களில் வேலை பார்க்கும் பலரும் இரவில் கண் விழித்து, பகலில் தூங்குகின்றனர். இதனால் என்ன தீமைகள் விளையும் என்பது பற்றி சித்தர் பாடல் ஒன்று.

சித்த மயக்கஞ் செறியும் புலத்தயக்க மெத்தனுக்

கமைந்த மென்பவை கனித்தமுற வண்டுஞ்ச சிவரை



நாயாப்ப் பன்னோய் கவ்வுமிராக் கண்டுஞ் சிலரை நம்பிக் காண்.

இதன் விளக்கம்: இரவில் நித்திரை செய்யாதவர் கனிடத்தில் புத்தி மயக்கம், தெளிவின்மை, ஐம்புலன் களில் (உடலின்) சோர்வு, பயம், படபடப்பு, அக்னி, மந்தம், செரியாமை, மலச்சிக்கல் போன்ற நோய்கள் எளிதில் பற்றும். வேட்டைக்குச் செல்லும் வேடருடைய நாய்கள் இரையைக் கவ்வுதல் போல் இரவில் நித்திரை யில்லாதவனை பற்பல நோய்கள் கவ்விக் கொள்ளும்.

எந்தத் திசையில் தலைவைத்துப் படுக்க வேண்டும் என்பதை சித்தர்கள் அன்றே தெளிவாகக் கூறியுள் ளனர்.

உத்தமம் கிழக்கு, ஓங்குயிர் தெற்கு, மத்திமம் மேற்கு, மரணம் வடக்கு.

கிழக்குத் திசையில் தலைவைத்துப் படுப்பது மிகவும் நல்லது, தெற்குத் திசையில் தலை வைத்துப் படுத்தால் ஆயுள் கூடும், மேற்குத் திசையில் தலை வைத்துப்படுத்தால் கனவு, அதிர்ச்சி உண்டாகும். வடக்குத் திசையில் ஒருபோதும் தலைவைத்துத் தூங்கக்கூடாது. இதனை விஞ்ஞான ரீதியாகவும் ஒப்புக்கொண்டுள்ளனர். வடக்குத் திசையில் இருந்து வரும் காந்தசக்தி தலையில் மோதும்போது அங்குள்ள பிராண சக்தியை இழக்கும். இதனால் மூளை பாதிக்கப்படுவதுடன் இதயக் கோளாறுகள், நரம்புத்தளர்ச்சி உண்டாகும்.

மேலும் மல்லாந்து கால்களையும் கை களையும் அகட்டி வைத்துக் கொண்டு தூங்கக் கூடாது. இதனால் இவர்களுக்குத் தேவையான ஆக்சிசன் உடலுக்குக் கிடைக்காமல் குறட்டை உண்டாகும். குப்புறப்படுத்துத் தூங்கக் கூடாது.

இடக்கை கீழாகவும், வலக்கை மேலாகவும் இருக்கும்படி கால்களை நீட்டி இடது பக்கமாக ஒருக்களித்துப் படுத்துத் தூங்க வேண்டும். இதனால் வலது மூக்கில் சுவாசம் சூரியக்கலையில் ஓடும். இதில் எட்டு அங்குலம் மட்டுமே சுவாசம் வெளியே செல்வதால் நீண்ட ஆயுள் வளரும். மேலும் இதனால் உடலுக்குத் தேவையான வெப்பக்காற்று அதிகரித்து பித்தநீரை அதிகரிக்கச் செய்து, உண்ட உணவுகள் எளிதில் சீரணமாகும். இதயத்திற்குச் சீரான பிராணவாயு கிடைத்து இதயம் பலப்படும்.

வலது பக்கம் ஒருக்களித்துப் படுப்பதால் இடது பக்க மூக்கின் வழியாக சந்திரகலை சுவாசம் ஓடும். இதனால் பனிரெண்டு அங்குல சுவாசம் வெளியே செல்லும். இதனால் உடலில் குளிர்ச்சி உண்டாகும். இரவில் உண்ட உணவு சீரணமாகாமல் புளித்துப் போய் விசமாக நேரிடும்.

டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்


ஹாஜீ Dr,K.Md மொய்தீன்
R.I.M.P M.D. (Acu)
9840140925
9884243910
துவக்கம் 1954
காஜா வைத்தியசாலை



348, திருவல்லிகேணி ஹைரோடு,
ஆதம் மார்கெட் அருகில்
D,1 போலிஸ் ஸ்டேஷன் எதிரில்,
சென்னை - 600 005.
முன் அனுமதி பெற்று வரவும்
சிறந்த மருத்துவம்
உடனே அறுகவும்

இளம்பிள்ளை வாதம், பக்கவாதம், அலர்ஜி, சைனஸ், ஆஸ்துமா, மஞ்சள் காமாலை, கழுத்து வலி, மூட்டு வலி, இடுப்பு வலி, சர்க்கரை நோய், மூலம், சிறுநீரகக்கல் கரைய, காக்கை வலிப்பு, தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், ஆண் – பெண் மர்மநோய் அறுவைச் சிகிச்சை இல்லாமல் குணப்படுத்தப்படும்.

## வைகோ வேண்டுகோள்!

எனது படத்தை பெரியதாகப் போடு, எனது படத்தை ஏன் போடவில்லை, என் படத்தை மட்டும் தான் போட வேண்டும், இதுவரை யாருமே வைத்திராத கட்அவுட். எனக்கு வை என்றெல்லாம் கழகத் தொண்டர் களிடம் சொல்லுகின்ற தலைவர்கள் நடுவில், அவற்றை யெல்லாம் துச்சமாக மதிக்கும் தூய அரசியல்வாதி வைகோ அவர்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு வைத்த வேண்டுகோள்!


1993 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நீதி கேட்டு அரசியலில் அறப்போர் தொடங்கி னோம். திராவிட இயக்கத்தில் மறுமலர்ச்சி காண, தமிழகத்தில் அணிவகுத் தோம். அரசியல் அரங் கத்தில் ஏற்பட்டுவிட்ட ஆடம்பர விளம்பரச் சீர் கேட்டினை அகற்றும் முயற்சியாக நமது இயக்க நிகழ்ச்சிகளில் பெரியார், அண்ணா இருவரைத் தவிர்த்து எவருக்கும் கட் அவுட் வைக்கக் கூடாது கட்சித் தலைவர்களின் காலில் விழும் கலாச்சாரம் அறவே கூடாது என்று பிரகடனம் செய்தோம். அதனையே பின்பற்றினோம். எனக்குக் கட் அவுட்கள் வைப்பதையோ, என் காலில் விழுவதையோ நான் அனுமதிப்பதே இல்லை என்பது அனைவரும் அறிந்ததே

காலம் செல்லச்செல்ல, தற்போது நிகழ்ச்சி களுக்கு விளம்பரம் செய்வதில் வண்ணப் படங்களைப் பெரிய அளவில் பதிப்பித்து, விளம் பரத் தட்டிகள் வைப்பது புதிதாக ஆக்கிரமித்து விட்ட விளம்பரக் கலாச்சாரம் ஆகும்.

தலைமைக் கழகம் நடத்துகின்ற மாநாடு, பொதுக்குழு உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பெரியார், அண்ணா திருஉருவப்படங்கள் தாங்கிய பேட்ஜ்கள் மட்டுமே அணிகிறோம். என்னுடைய புகைப்படத்தைப் பதிக்க அனுமதித்தது இல்லை. அண்மையில் நடைபெற்ற பொதுக்குழு மேடை யில் கூட பெரியார் அண்ணா படங்களை மட்டுமே இடம் பெறச் செய்தோம்.

காஞ்சி, நெல்லை, கரூர், விருதுநகர் மாநாடு களில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா திருஉருவப் படங்களும், அவர்களின் மணிவாசகங்களும் இடம் பெற்ற விளம்பரத் தட்டிகளையே பொது இடங்களில்,





பொதுமக்கள் பார்வையில் படும்படியாக அமைத்து இருந்தோம். பொதுவுடைமை இயக்க நண்பர்கள் உள்ளிட்ட பல்வேறு இயக்க நண்பர்களும், பொதுமக்களும் இதனை மிகவும் பாராட்டிச் சொன்னார்கள்.

நாட்டுக்கு, தமிழகத்துக்கு, இன்றையச் சூழலுக்குத் தேவையான கருத்துக்களை, பெரியாரும், அண்ணாவும் சொன்ன வாசகங்களை மக்கள் மனதில் பதியும் வண்ணம் நிகழ்ச்சிகளின்போது, சாலை ஓரங்களில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு எவ்வித இடையூறும் இன்றி இடம்பெறச் செய்வது ஒன்றே சிறப்பு அளிக்கும்.

அவரவர் பொருளாதார வசதிக்கு ஏற்றவாறு அம்மாதிரி விளம்பரத் தட்டிகளை ஏற்பாடு செய்யலாம். எனவே இனிமேல் கழகத்தினர் நடத்துகின்ற பொதுக்கூட்டங்களாயினும், திருமண விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளாயினும் என்னுடைய புகைப்படத்தை எந்த விளம்பரத் தட்டியிலும் பயன்படுத்தக் கூடாது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழ் ஈழ தேசியத் தலைவர் பிரபாகரன் இவர்களின் படங்களை, அவர்கள் சொன்ன பொருத்தமான வாசகங்களை, சுவரொட்டியிலோ, விளம்பரத் தட்டியிலோ பயன்படுத்தலாம். அவற்றை ஏற்பாடு செய்யும் தோழர்களின் புகைப்படங்கள் அந்த விளம்பரத்தில் இடம்பெறக் கூடாது என வேண்டுகிறேன். கழகத் தோழர்கள் தங்கள் பெயர்களை, பொறுப்பில் இருந்தால் அப்பதவிகளை மாத்திரம் அதில் இடம் பெறச் செய்து மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் கொடி வண்ணத்தையும், பம்பரம் சின்னத்தையும் பயன்படுத்தி, 'இவண் மறுமலர்ச்சி தி.மு.கழகம்' என்று அந்த விளம்பரங்களை அமைத்துக் கொள்ளலாம்.

அரசியல் கட்சிகளின் இன்றையத் தலைவர்களின் உருவப் படங்களோடு சாலை ஓரங்களில் விசுவரூபம் எடுக்கும் விளம்பரத் தட்டிகள், பொதுமக்கள் மனதில் இனம் புரியாத வெறுப்பை விதைக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டும், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் கடைப்பிடிக்கின்ற இயக்கம் நமது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மதிப்பும் நல்லெண்ணமும் மக்கள் மனதில் ஏற்பட்டு இருப்பதைக் கருதியும் இந்த விளம்பரத் தட்டிகள் வைக்கும் விதத்திலும் நாம் ஒழுங்கைக் கடைப்பிடிப்பதே சாலச் சிறந்தது என்பதை ஆழ்ந்து சிந்தித்து, தலைமை நிர்வாகிகளோடும், மாவட்டச் செயலாளர்களோடும் கலந்து ஆலோசித்து இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இதற்குப் பின்னரும், என் புகைப்படங்களை பெரியதாக அச்சிட்டு விளம்பரத் தட்டிகள் வைக்கும் நிகழ்ச்சிகளில் நான் பங்கு ஏற்க இயலாத நிலை ஏற்பட்டுவிடாமல் தவிர்க்கும் விதத்தில், கழகக் கண்மணிகள் எனது வேண்டுகோளைச் செயல்படுத்த அன்புடன் வேண்டுகிறேன். ◆


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# யார் காரணம்?

## வேர்மகள்

கொலை வழக்கு ஒன்றில், கொலைக்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை என்று அறிவிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரும் தற்போது அந்தத் தண்டனையிலிருந்து தப்பியிருக்கிறார்கள். அதற்கு மிக முக்கியக் காரணம் மனிதாபிமானமுள்ள, அறத்தை அரங்கேற்றும் ஒரு சிறந்த தமிழர்தான். அவர் உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் மாண்பமை சதாசிவம் அவர்கள்தான். தனது குழுவினரோடு கலந்து ஆலோசித்து இந்த நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்.

23 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த அவர்களை விடுதலை செய்ய முன்வந்தார் செயலலிதா. வரவேற்க வேண்டிய செயல். ஆனால் அவரது செயலுக்கும் சில அற்பர்கள் எதிர்ப்புத் தெரிவித்து அவர்களது விடுதலையில் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கொன்றவர், கொல்லப் பட்டவருடன் வெடித்து அடையாளம் தெரியாத அளவிற்கு சிதறிப் போய்விட்டார். ஆனால் அதற்குத் துணை போனவர்கள் என்று சொல்லி பலரை பலி கடாக்கள் ஆக்கியது. கொலைக்கு மூலகாரணம் மேதகு பிரபாகரன் அவர்கள்தான் என்று கூறி ஈழவிடுதலைப் போராட்டத்தை நசுக்கியது. ஈழத்தமிழர்கள் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் பேர்களைக் கொன்றது காங்கிரஸ் கட்சி ஆட்சி. ஒருவரின் கொலைக்கு உதவியவர்கள் என்பதால் 23 ஆண்டுகள் சிறைத்தண்டனை கொடுத்த நீதிமன்றம் சுமார் இரண்டு இலட்சம் பேர் கொல்லப்பட்டதற்கு துணைநின்றும் நேரடியாக களத்தில் உதவி செய்தும், கொலைக்கருவி கொடுத்தும் உதவிய காங்கிரசுக்கு கொடுக்க வேண்டிய தண்டனை என்ன? அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? இந்தியக் குடிகள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நீதியின் புதல்வர்? ஒருவர் சொல்கிறார். பிரதமராக இருந்த ஒருவருக்கே





> **பேரறிவாளன் பேட்டரி வாங்கிக் கொடுத்தார். அந்தப் பேட்டரி வாங்கி வருகையில் வழியில் இருந்த ஆரிய பவனில் பேட்டரி வாங்கியது போக மீதம் இருந்த காசில் இட்லி சாப்பிட்டார் என்றால், அந்த ஆரியபவன் உரிமையாளருக்கும் தூக்குத் தண்டனை கொடுப்பார்களா? கொன்றவராகக் கருதப்படும் தனு அந்த இடத்திலேயே சிதறி விட்டார்.**

இந்த நிலை என்றால் சாதாரண மனிதனுக்கு என்ன நிலை என்று? அவர் அசுராதியில் பிரதமர், சாதாரண மனிதர் இல்லையா? சாதாரண மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அசாதாரணமாக மாறிவிடுவாரா? மனிதன் என்றால் எல்லோரும் மனிதர்கள் தான். அதுவும் ஜனநாயக நாட்டில் எல்லோரும் ஒரே நிலையில் தான் வைத்துப் பார்க்கப்படுகிறார்கள். சட்டம் அனைவருக்கும் சமம். பிரதமராக இருப்பவர் 1000 ஓட்டுகள் போடலாம், குடியரசுத்தலைவர் 2000 ஓட்டுகள் போடலாம் சாதாரண மனிதன் ஒரு ஓட்டு தான் போடவேண்டும் என்று சட்டம் இருந்தால், அந்த தலைப் புதல்வர் சொல்வதை நாம் ஒருவேளை ஏற்றுக் கொள்ளலாம். எந்தக் கொம்பனாக இருந்தாலும் மக்களாட்சி என்றால் ஒருத்தனுக்கு ஒரு வாக்குதான். மனிதர் அனைவரும் சமம் என்பதை பரம்பரைப் பணக்காரர் புரிந்து கொள்ள வேண்டும். பரம்பரை பணக்காரர் என்றால் பரம்பரை பரம்பரையாக பலரது சொத்துக்களை உழைப்பை கொள்ளையடித்து வைத்திருக்கிறார்கள் என்றுதான் பொருள்.


தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றான் பாரதி. இங்கே பலருக்கு உணவில்லை. ஆனால் இந்தப் பரம்பரைப் பணக்காரர்களோ பரம்பரை பரம்பரையாக பதவிசுகம் காண்பார்களாம். யார் பசித்திருந்தாலும் தாங்கள் சாப்பிட்டுவிட்டு, மிச்சத்தை குப்பையில் எறிவார்களாம்! இது தான் அறமோ?


நான் உயர்வு, சாதாரண மனிதன் (மக்கள்) தாழ்வு என்று ஒருவன் நினைப்பானேயாகில் அவனை எப்படி ஒரு சரியான மனநிலையில் உள்ளவனாகக் கருத முடியும்? ஆறாம் அறிவு உள்ள அனைவரும் இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். உயர் பதவிகளில் இருப்பவர்கள் கொலை செய்தால் அது கொலை இல்லையா? அது குற்றம் இல்லையா? சாதாரண மனிதன் கொலை செய்தால் மட்டும் அது கொலையா? உயர்பதவிகளில் உள்ளவன் திருடினால் அது திருட்டு இல்லை? பொதுமக்களில் ஒருவன் திருடினால் அது திருட்டு என்பது பணக்காரனின் சட்டம். மக்களாட்சி நடக்கிற நாட்டில் இது சட்டமல்ல என்பதை சர்வாதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

காங்கிரசுக்காரர்கள் பலர் கொதிக்கிறார்கள். உங்களால் பாதிக்கப்பட்டவர்கள் கொதித்தால் நீங்கள் என்ன ஆவீர்கள் என்பதை நினைத்துப் பார்த்துக் கொதியுங்கள் அல்லது குதியுங்கள். குற்றமில்லாதவன் மற்றொருவனை குற்றவாளி என்று சொல்ல முடியும். உனக்குள் ஓராயிரம் குற்றங்களை வைத்துக் கொண்டு, அவன் குற்றவாளி, இவன் குற்றவாளி, அவன் தண்டனைக்குரியவன், இவன் தண்டனைக்குரியவன் என்று கூறுவது சர்வாதிகாரம். சர்வாதிகாரம் ஒரு மனிதனை எந்த நிலைக்குக் கொண்டு போய்விடும் என்பதை உலகம் அடிக்கடி சொல்லிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது.

பேரறிவாளன் பேட்டரி வாங்கிக் கொடுத்தார். அந்தப் பேட்டரி வாங்கி வருகையில் வழியில் இருந்த ஆரிய பவனில் பேட்டரி வாங்கியது போக மீதம் இருந்த காசில் இட்லி சாப்பிட்டார் என்றால், அந்த ஆரியபவன் உரிமையாளருக்கும் தூக்குத் தண்டனை கொடுப்பார்களா? கொன்ற வராகக் கருதப்படும் தனு அந்த இடத்தி லேயே சிதறி விட்டார். மூலகாரணம் என்று சொல்லி ஒரு இனத்தையே அழித்தாகிவிட்டது இன்னும் எதற்கு இரத்தப் பசி? மிகப்பெரிய நாட்டின் தேசியத்தலைவர் கொல்லப்படுகிறார். அவருக்கு அருகில் அவரது கட்சிக்காரர்கள் ஒருவர் கூட இல்லை? என்ன அதிசயம்? இந்த அதிசயத்தை நினைத்துப் பார்க்கிற போது உண்மையில் கொலை செய்யத் தூண்டியவர்கள் யார் என்ற கேள்வி சாதாரண மனிதனுக்கும் ஏற்படும் அல்லவா?

◆





# சும்மா...! வெட்டிப்பந்தா

ஐந்தாவது தெரு சங்கரநாராயணன். அவரது பக்கத்து வீட்டுப் பூனையை கல் எறிந்து காலை உடைத்துவிட்டார் என்று விலங்குகள் நல ஆர்வலர் என்று பெயர்பெற்ற சியாமளனிடம் வத்தி வைத்தார் வரதராசன்.

சியாமளன் உடனே அலைபேசியை எடுத்தான், புகார் சொன்னான், அதன்பிறகு புகாரைப் பெற்றவர்கள் சங்கர நாராயணனை உண்டு இல்லை என்று செய்து விட்டனர். சியாமளனுக்கு அப்படியொரு பெருமை. தான் ஒரு மிகச்சிறந்த விலங்கு நல ஆர்வலர் என்பதை இப்படித்தான் காட்டிக் கொண்டான். ஆனால் அவன் வீட்டு வாசலில் நிற்கும் நாய்க்கு எச்சி இலையைக் கூட போடமாட்டான்.

ஒருமுறை காஞ்சி மடத்திற்குச் சென்று விட்டு, திரும்பிக் கொண்டிருந்தான். காரில் வந்து கொண்டிருந்த போது அவனுக்கு முன்னே சென்ற வாடகைக்கார் ஒரு நாயை அடித்து விட்டுப் போய்க் கொண்டிருந்தது. நாய் சாகவில்லை. ஆனால் காயம் ஏற்பட்டிருந்தது. நமது சியாமளனோ நாய்க்கருகில் மெதுவாகச் சென்று கண்ணாடியை இறக்கிப் பார்த்துவிட்டு, வண்டியை வேகமாகச் செலுத்தி நாயை அடித்த வாடகை வண்டிக்கு முன்னால் சென்று அந்த வண்டியை நிறுத்தி கீழே இறங்கினான். தனது அலைபேசியில் காரை போட்டோ எடுத்தான். கார் ஓட்டுநரை போட்டோ எடுத்தான். நீ எப்படி ஒரு நாயை மோதி அதைக் கொல்லலாம்? உன்னை என்ன செய்கிறேன் பார் என்று கூறிவிட்டு காரை எடுத்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தான்.

(இதற்கிடையில் அடிபட்ட நாய் யாரும் கவனிக்காததால் உயிருக்குப் போராடி பத்துப் பதினைந்து நிமிடங்களில் இறந்து போய்விட்டது. அதன்பிறகு வந்த வாகனங்கள் எல்லாம் அதன்மேல் ஏறி ஏறி நாயே உருவம் காணாமல் போய்



விட்டது) சியாமளன் சென்னைக்கு வந்தான். அந்தக் கார் ஓட்டுநர் மீது வழக்குப் போட்டுவிட்டான்.

வழக்கு, விசாரணைக்கு வந்தது. கார் ஓட்டுநர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். நீதியரசர் வணங்காமுடி வழக்கை விசாரித்தார். கார் ஓட்டுநர் சொன்னார், நான் வேண்டுமென்று மோதவில்லை. அந்த நாய் திடீரென குறுக்கே ஓடிவந்தது. இது ஒரு விபத்துதான் என்றான். ஆனால் சியாமளனோ இல்லை, இவன் வண்டியை பிரேக் போட்டிருக் கலாம், இவன் மீது தான் தவறு. ஆகவே சரியான தண்டனை கொடுக்க வேண்டும் அப்போதுதான் இந்த டிரைவர்களுக்கெல்லாம் புத்தி வரும் என்றான்.

வணங்காமுடி சியாமளனை உற்றுப் பார்த்தார், பின்னர் அவனை நோக்கி நீங்கள் விலங்கு நல ஆர்வலரா? என்று கேட்டார். ஆம் என்றான் சியாமளன். அந்த விபத்து நடந்ததும் நாய் இறந்து விட்டதா அல்லது உயிரோடு இருந்ததா? என்று கேட்டார் சியாமளனிடம். அவனோ உயிர் இருந்தது

துடித்துக் கொண்டிருந்தது என்றான். நீங்கள் உண்மையான விலங்கு நல ஆர்வலராக இருந் தால் அடிபட்டு உயிருக்குப் போராடிக் கொண்டி ருந்த நாயை உங்கள் வண்டியில் ஏற்றி மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை கொடுத் திருக்க லாமே. ஏன் அதைச் செய்ய வில்லை என்று கேட் டார். அவன் ஏதும் சொல்லாமல் நின்றான்.

அப்போ உங்கள் நோக்கம் விலங்குகளைக் காப்பதல்ல விலங்கு நல ஆர்வலர் என்று பெயர் வாங்குவது. அப்படித் தானே என்றார். இல்லை என்றான். பிறகு ஏன் அந்த நாயை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லவில்லை என்ற கேள்வி யைக் கேட்டுவிட்டு தீர்ப்பை எழுதி வாசித்தார்.

ஒரு நாயை கார் மூலம் மோதி அதன் உயிர் போகக் காரணமாக இருந்த கார் ஓட்டுநர் தெருவில் திரியும் ஒரு நாய்க்குட்டியைக் கண்டுபிடித்து சியாமளனிடம் கொடுக்க வேண்டும். அதை விலங்குகள் நல ஆர்வலரான சியாமளன் ஆறுமாதம் தனது பொறுப்பில் தானே வளர்த்து வரவேண்டும்.

நாய்க்குத் தேவையான உணவை தினந் தோறும் கார் ஓட்டுநர் சியாமளனிடம் கொண்டு போய் கொடுக்க வேண்டும். நாய்க்குட்டியை முதலில் நீதிமன்றத்தில் காண்பிக்க வேண்டும். ஆறு மாதத்திற்குப் பிறகும் நீதிமன்றத்தில் காண் பிக்க வேண்டும். அதன் பிறகு சியாமளன் விருப்பப் பட்டால் தொடர்ந்து நாயை அவரே உணவு கொடுத்து வளர்க்கலாம். இல்லாவிட்டால் விலங்குகள் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். என்று தீர்ப்பு வழங்கினார். சியாமளன் புத்தி வந்தவனாய் வீடு திரும் பினான்.


**முற்றம் மாத இதழ்**
**உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**

வெளியிடும் இடம் : 13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024

வெளியிடும் காலம் : மாதம் ஒரு முறை
அச்சிடுபவர் : டிசைன்ஸ்பார்க்
இந்தியக்குடிமகனா? : ஆம்
முகவரி: டிசைன்ஸ் பார்க்
22, வீவர்ஸ் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் : வே.தளபதி
இந்தியக் குடிமகனா? : ஆம்
ஆசிரியர் பெயர் : வே. தளபதி
முகவரி : 13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024

*வே. தளபதி ஆகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கிறேன்*

ஒப்பம்

வே.தளபதி
வெளியிடுபவர்

# உதிர்த்தவை...



## கோரைப்பாய்

குத்தாது உறுத்தாது
குளிரூட்டும் உறவுகளை
அமர வைத்து அகமகிழும்

விரித்தால் சீராகும்
சுருட்டினால்
சுருங்கிப் போகும்

சுருட்டினால்
முகம் வாடி
உடல் ஒடுங்கி
ஓரம் போய்விடும்

விரித்ததும்
முகம் மலர்ந்து
முற்றம்
வருவோரை எல்லாம்
இளைப்பாற்றும்

◆

எனது உயரம் எனக்குத் தெரியும்
உயரத்தைக் கூட்டி
ஊருக்குச் சொல்வது
வறட்டுக் கௌரவம்

கன்னியின்
கரங்களுக்கு
கலைகொடுக்கும்
வளையல்
காளையர்க்குள்
கருத்தழிக்கும் வளையல்.
வகைவகையாய்
வளையல் கர மேறினால்
கழிதே ஒருயிர் உலகில் உதிக்கும்

◆

ஈழத்தமிழர்களின்
உயிர்களை
அரசியலாக்கி
அவர் குடும்பம்
வளர்த்தார்
அவர் குடும்பமோ
அழிப்பார்
இல்லாமலே அழிந்தது.

◆

தந்தை கொல்லப்பட்டான்
தனயன் கொதித்தான்
கொன்றழித்தான் பலரை
தந்தையாகவும்
தனயன்களாகவும்
ஆயிரம் ஆயிரம்
தமிழர் கொல்லப்பட்டார்
யார் கொதிப்பது?

காந்திருத்தலால் கவலைப்படாதே
காத்திருப்பு கற்றுக் கொடுக்கும்
காலத்தின் அருமையை!

**வைரி**



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


Réserver
Aerosysteme
Airmail
Language:
BOCACHICACINEMA.COM
HOME · SHOW TIME · TRAILER · GALLERY
OWN PRODUCTION | BLU-RAY | DVD&CD | MP3 | AUDIO LANCH | E-STORE | ABOUT US | CONTACT US
COMMING SOON
KOCHADAIYAAN
soon
Andava Perumal
soon
Kiripillai
soon
kovalanin kathali
soon
Vetry Selvan
soon
CINE BOUTIQUE
cineworld.co.uk
safaricinema.com
boleyncinema.com
5K
SILVER
SCREEN
Boca Chica Cine Circuit
24/17, Door No:F1,Sevamani Apt
Bajanai koil 2nd street, Vadapalani,chennai-600 026
call: 98411 57476


MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924

விரைவில் வெளிவருகிறது....!

விசவனூர் வே.தளபதி
எழுதிய

# முற்றத்தின் சீற்றங்கள்

கட்டுரைத் தொகுப்பு



மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly March 2014

விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 5 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி





# நாடாளுமன்றத் தேர்தல் திருவிழா

விரைவில் இசை



மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly March 2014



ஆசிரியர்

**விசவனூர் வே.தளபதி.**

இணை ஆசிரியர்

அ.வெற்றிவேந்தன் எம்.ஏ., பி.எல்.,

உதவி ஆசிரியர்கள்

இமயவரம்பன் பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,

அ. உமாமகேசுவரி எம்.ஏ.,

பி.எம்.பாலா

ஜெ. ராஜா சிங்,

ஜெய்

தலைமைச் செய்தியாளர்கள்

வே. வளையாபதி

த. ஞானமணி பி.எஸ்.சி., பி.லிட்.,

செய்தியாளர்கள்

பொன்முடி சிவகங்கை

டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்

வெ. இராஜ்குமார்

அமுதாநம்பி

ஏழுமலை

ச. உதயகுமார்

க. பவானி பி.ஏ.,

சிவக்குமார் மதுரை

ரஞ்சித் இமானுவேல்

பெ. அர்ஜுன்

சாதிக்பாட்சா கோவை

மு.கலைச்செல்வன்

அரக்கோணம் ராஜேஷ்

திருவள்ளூர் ஆனந்த்

லோகநாதன்

ஷாம் எர்னஸ்ட்

வடிவமைப்பு

எழில் வரைகலை

புகைப்படக்காரர்

இரமேஷ்



அலுவலக முகவரி

13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம்,

சென்னை 600 024

அலைபேசி: 8056281973, 9444363917.

மின்னஞ்சல்:

mutram2010@gmail.com

இணைய தளம் :

www.mutram.in


## உள்ளே


நாடாளு மன்றத் தேர்தல் திருவிழா
தலையங்கம் ....................4

தமிழக தேர்தல் கட்சிகள் தொகுதிகளின் வியூகம்
உமாமகேஸ்வரி, அரக்கோணம் இராஜேஷ் ....................6

மதுவினாலும் இலவசங்களாலும்
தமிழன் மானம் இழந்து வாழ்கிறான்
தேவசகாயம் ஐ.ஏ.எஸ். பேச்சு ....................8

இலக்கணங்களின் வழி நிற்கும்
ஒப்பற்ற தமிழ்மொழி
இயற்றமிழன் ....................12

இலங்கையில் தமிழர்(16)
முருகர் குணசிங்கம் ....................15

அப்பாவிகள் காவல் துறையினரிடம்
சிக்கித் தவிப்பு
வழக்கறிஞர் இமயவரம்பன் ....................17

புரட்சிக் கவி(5)
பாரதிதாசன் கவிதை ....................20

புதுப்பாடம்(சிறுகதை)
இருங்கோவேள் ....................22

தண்ணீரைச் சேமிப்போம்
கவிஞர் இராம பரஞ்சோதி ....................25


மனிதன் எப்படி படுத்து
உறங்க வேண்டும்! சித்தர்களின் விளக்கம்
டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த் ....................26

யார் காரணம்
வேர் மகள் ....................30

சும்மா! வெட்டிப்பந்தா
தளபதியார் ....................32



காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற கணக்கிற்கு
எடுத்தனுப்பலாம்.





# நாடாளுமன்றத் தேர்தல் திருவிழா

இந்தியப் பெருநாட்டின் பதினாறாவது மக்களவைத் தேர்தல் தேதி அறிவிக்கப் பட்டுவிட்டது. அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பதிலும் வேட்பாளர்களைத் தேர்ந் தெடுத்து அறிவிப்பதிலும் மும்முரம் காட்டிக் கொண்டிருக்கின்றன. நடுவண் அரசின் அதிகாரத்தைப் பெறப்போவது யார்? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இயற்கையாகவே எழுந்துள்ளது என்றாலும், அவரவர் அரசியல் கண்ணோட்டத்திற்கேற்ப இவர்தான் பிரதமர், அந்தக் கட்சிதான் ஆட்சி அமைக்கும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

காங்கிரசுக் கட்சிக்காரர்கள் தங்களை, தேசிய அளவில் பெரிதாகப் பேசிக்கொண்டாலும், தமிழகத்தில் தலைகவிழ்ந்தே திரிகிறார்கள். காரணம், அவர்களை யாரும் மதிக்கவில்லை என்பதுதான். மக்களவைத் தேர்தல்களில் கூட்டணித்தலைமையை இதுவரை ஏற்று வந்த காங்கிரசு தன்னந்தனியாக விடப்பட்டுள்ளது. சிறு சிறு கட்சிகள் கூட அவர்களோடு உறவு வைத்துக்கொள்ள மனமின்றி, தொகுதி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை காங்கிரசோடு சேர மாட்டோம் என்று சொல்லி வேறு கூட்டணிகளில் தொகுதிகளை எதிர் பார்க்காமல் இணைந்திருக்கின்றன. ஏன் இந்தப் பாராமுகம்? காங்கிரசுக் கட்சி தமிழர்களுக்கு எதிராகச் செய்த செயல்கள்தான். மீனவர் பிரச்சினை, தமிழீழப் பிரச்சினை, ஏழு தமிழர்களின் விடுதலைப் பிரச்சினை, கூடங்குளம் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, காவிரிப் பிரச்சினை என்று பல விதத்தில் தமிழர்களுக்கு எதிராக காங்கிரசு செயல்பட்ட தால்தான் இன்று இந்த நிலை.

மற்ற மாநிலங்களிலும் காங்கிரசு கதிகலங்கிப் போய்த்தான் இருக்கிறது. ஆந்திரப்பிரதேசத்தை இரண்டாக உடைத்து, ஆதரவும் எதிர்ப்பும் என்ற நிலை, தனது முதலமைச்சரைக்கூட தக்கவைத்துக் கொள்ள முடியாத அவல நிலை. தலைநகரில் திறமை

மிக்க முதலமைச்சர் சீலா தீக்சித் இருந்தும் அங்கே நடந்த சட்டமன்றத்தில் மிகவும் மோசமாக தோற்ற நிலை, அதே நேரத்தில் நடந்த மற்ற ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் மண்ணைக் கவ்விய நிலை, ஆக காங்கிரசு, மந்திர எண்ணான 272ஐ எட்டிப் பிடிப்பது என்பது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதைதான்.

திட்டமிட்டே, வென்று விடுவார், வென்று விடுவார் என்று சங்பரிவாரின் ஆதரவுபெற்ற ஊடகங்கள் ஊதிப்பெரிதாக்கிய மோடி 272ஐ பிடித்து விடுவாரா என்றால், சந்தேகம்தான். கட்சிக்கு என்று பெரிதாக ஆதரவு மக்களிடத்தில் இல்லை. காங்கிரசும், பாரதிய சனதாவும் பெயரளவில்தான் வேறு வேறு கட்சிகள், மற்றபடி எல்லா நடவடிக்கைகளும் ஒன்றாகத் தான் இருக்கின்றன. ஊழல் தொடங்கி, விலைவாசி ஏற்றம், அயலுறவுக் கொள்கை என்று எதை எடுத்தாலும், ஒரே குட்டையில் ஊறிய இரண்டு மட்டைகள்தான்.

டெல்லி தேர்தலுக்கு முன்புவரை மோடிக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது என்பதுபோல் படம் காட்டப் பட்டது கெஜ்ரிவால் எழுச்சிக்குப் பின், தாங்க மாட்டார் மோடி என்ற நிலை ஏற் பட்டு விட்டது. நேரகவே நான் ஒரு இந்துத்வா என்று கொக்கரிக்கும் மோடிக்கு மற்ற மதத்துக்காரர்கள் வாக்களிப்பார்கள் என்பதை நம்ப இயலாது. மோடி வந்தாலும் வந்துவிடுவார். அப்படி வந்து விட்டால் நமக்கு கடைக்கண் பார்வை கிடைக்கும் என்ற எண்ணத்தில் சில கிறித்துவத் தலைவர்களும், சில முகம்மதிய தலைவர்களும் மோடியை சந்தித்து ஆதரவு தெரிவித்திருக்கின்றனர். இவர்கள் தங்களது வாக்குகளை மட்டுமாவது மோடிக்கு பதிவு செய்வார்களா என்பதே கேள்விக்குறிதான்.

மற்ற கட்சிகளெல்லாம் சேர்ந்து மூன்றாவது அணி அமைத்து ஆட்சியைப் பிடிக்குமா என்றால்? அதிலும் சந்தேகம்தான். ஒருவேளை அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் யார் பிரதமர் என்ற நிலையில் பலர் அந்தப் பதவிக்கு ஆசைப் படுவார்கள். தமிழ்நாடு முதலமைச்சருக்கு வங்காள முதல்வர் மம்தா ஆதரவு தெரிவித் திருக்கிறார். அந்தப் போட்டியில், கம்யூனிஸ்ட் தலைவர்கள், நிதிஷ்குமார், முலாயம்சிங் யாதவ், மாயாவதி என்று ஒரு நீண்ட பெயர் பட்டியலே இருக்கிறது. அவர்களும் நிரந்தரமாக ஆட்சியில், அதிகாரத்தில் இருப்பார்களா என்றால் இருக்க மாட்டார்கள். இந்திய மக்களவையின் பதினாறாவது தேர்தல் மக்களுக்கு ஒரு குழப்பத் தைத்தான் தோற்றுவிக்கும் போலிருக்கிறது.

ஒவ்வொரு தொகுதியிலும் நிற்கும் வேட்பாளர்களில் நல்லவருக்கு, தன்னலம் பாராதவருக்கு வாக்களிக்கலாம் என்றால் அதுவும் முடியாது என்ற நிலைதான் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்களை தேர்தெடுப்பதற்காக நிகழ்த்துகின்ற நேர்காணல் என்ற ஏற்பாட்டில், அவர்கள் எவ்வளவு செலவு செய்ய முடியும், கட்சிக்கு எவ்வளவு நிதிகொடுக்க முடியும் என்று கேட்டு, அதிகமாக செலவு செய்வேன் என்று சொல்பவரைத்தான் வேட்பாளராக அறிவிக்கிறார்கள்.

அப்படி அறிவிக்கப்பட்டவர்கள் எப்படி தன்னலம் பாராது தங்களது பணத்தை வெகுவாக செலவு செய்து மக்களுக்கு நன்மை செய்ய வருவார்கள். செய்த செலவை விட பத்து இருபது மடங்கு கொள்ளையடித்துவிடலாம் என்ற பொது நலத்துடன்? தான் தேர்தலில் நிற்கிறார்கள். மக்களாட்சியின் உயரிய நோக்கம் இப்படித்தான் சந்தி சிரிக்கிறது.

இலவசங்களிலும் சாராயத் திலும் ஊறிப் போன மக்கள் சிந்திக்க திராணியற்று அந்த நேரத்தில் என்ன தோன்றுகிறதோ அதைச் செய்துவிட்டு அரசியல் கட்சிகளிடம் ஐந்து ஆண்டுகளுக்கு அடிமைச்சாசனத்தில் கையெழுத்திட்டு விடுகின்றனர்.

உண்மையாகவே மக்களாட்சியின் மேலும், மக்களின் நலன்கள் மேலும் அக்கறை கொண்ட, தன்னலம் பாரா சிறிய கட்சிகள், சில தனி வேட்பாளர்கள் (சுயேட்சைகள்) இருந்தால் அவர்களுக்கு வாக்களிப்பதுதான் நல்லது என்று எல்லா மக்களும், என்று நினைக்கிறார்களோ, அப்போதுதான் பெரிய அரசியல் கட்சிகள் தங்களது போக்கை மாற்றிக் கொள்ளும். வாக்குப் பதிவு நாள்வரை இந்திய நாடு என்ற கப்பலின் சுக்கான் பொதுமக்களிடம்தான்.

சுக்கானைச் சரியாகப் பிடித்தால் கரை சென்று சேரலாம். வாக்குகளைச் சரியான நபருக்குப் பதிவு செய்தால், மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒளியேற்றிக் கொள்ளலாம். அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது என்பது ஒவ்வொரு இந்தியனின் கடமை மட்டுமல்ல உரிமையும்தான். ◆



உமா மகேசுவரி ● அரக்கோணம் ராஜேஷ்



# தமிழக தேர்தல் கட்சிகளின் தொகுதிகளின் வியூகம்

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றவர்கள்.

| | | |
|---|---|---|
| 1977 | ஒவி.அழகேசன் | காங்கிரசு |
| 1980 | ஏ.எம்.வேலு | காங்கிரசு |
| 1984 | ஆர். ஜீவரத்தினம் | காங்கிரசு |
| 1989 | ஆர். ஜீவரத்தினம் | காங்கிரசு |
| 1991 | ஆர். ஜீவரத்தினம் | காங்கிரசு |
| 1996 | ஏ.எம்.வேலு | தமிழ் மாநில காங்கிரசு |
| 1998 | கோபால் | அதிமுக |
| 1999 | ஜெகத்ரட்சகன் | திமுக |
| 2004 | ஆர். வேலு | பாமக |
| 2009 | ஜெகத்ரட்சகன் | திமுக |

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் அதிமுக வெற்றி உறுதி.

வேலூர் மாவட்டத்தின் முக்கிய நகரமான அரக்கோணம் நாடாளுமன்றம், 20 ஆண்டு களுக்கு முன்பு தனித்தொகுதியாக இருந்து வந்தது. காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ஜீவரத்தினம் தொடர்ந்து இத்தொகுதியில் வெற்றி பெற்று வந்தார். பிறகு இத்தொகுதி பொதுத் தொகுதி யாக மாற்றப்பட்டு காங்கிரசு கட்சியின் வேலு வெற்றி பெற்றார். அதற்கடுத்து அதிமுக கூட்ட ணியில் பாமக சார்பில் அ. வேலு போட்டியிட்டு, வெற்றி பெற்று மத்திய இணைஅமைச்சர் ஆனார். இவருக்குப் பின்பு திமுக சார்பில் போட்டியிட்ட ஜெகத்ரட்சகன் வெற்றி பெற்று மத்திய அமைச்சரானார்.

ஒரு காலத்தில் காங்கிரசின் கோட்டையாக விளங்கிய இத்தொகுதி காலப்போக்கில் திமுக விற்கும் அதிமுகவிற்கும் சாதகமான தொகுதியாக விளங்கி வருகிறது. இத்தொகுதியில் கடந்த 20 ஆண்டுகளில் அதிமுக நேரிடையாக வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டணிக் கட்சிகளுக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைத்தது.

அஇஅதிமுக முதன்முறையாக இத்தொகுதி யில் தனித்துப் போட்டியிடுகிறது. அரக்கோணம் தொகுதியைப் பொறுத்தவரையில் அதிமுகவிற் கும்

திமுகவிற்கும்தான் போட்டி. அதிமுக சார்பில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் திருவள் ளூர் வடக்கு மாவட்ட செயலாளருமான **திருத்தணி கோ. அரி** போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து திமுக சார்பில் யார் நிறுத்தப் படப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. ஜெகத்ரட்சகன் ஸ்ரீபெரும் புதூர் தொகுதிக்கு மாற்றப்படலாம் என்று ஒரு செய்தி நிலவுகிறது. பாஜக கூட்டணியில் உள்ள பாமக வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரும் அரக்கோணம் தொகுதியின் முன்னாள் எம்பியு மான வேலு போட்டியிடுகிறார். காங்கிரசுக் கட்சி ஒருவேளை தனித்துப் போட்டியிட்டால் அரக்கோணம் தொகுதியின் முன்னாள் காங்கிரசின் எம்பி யான பாரதி பஸ் முதலாளி வேலு போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த நாடாளுமன்றத் தேர்த லில் அரக் கோணம் தொகுதியில் மூன்று அல்லது நான்கு கட்சி கள் போட்டியிட்டாலும் அதி முகவிற்கும் திமுகவிற்கும்தான் நேரடியான போட்டி இருக்கிறது. அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள திருத் தணி, அரக்கோணம், சோளிங் கர், ராணிப்பேட்டை, ஆற்காடு, காட் பாடி ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் தலித் மக்கள் தொகை அதிகமாகவும், வன்னியர்கள் இரண்டாம் இடத்திலும் அதற்கடுத்து முதலியார் சமுதாய மக்களும், யாதவ சமுதாய மக்களும் முத்தரையர் சமுதாய மக்களும் முகம்மதியர்களும் நாயுடுக்களும் பிற சமுதாயத்தினரும் உள்ளனர்.

அரக்கோணம் தொகுதி வெற்றியை, தலித் மக்களும் வன்னிய மக்களும் முதலியார் மக்க ளுமே தீர்மானிக்கிறார்கள். இந்நிலையில் அதிமுக விற்கு இது முக்கியமான தேர்தலாகும். இந்தத் தேர்தலில் அதிமுக மிகப்பெரும் வெற்றியைப் பெறும் என்றும், தேசிய அரசியலை முதலமைச்சர் ஜெயலலிதா தீர்மானிப்பார் என்றும் பேசப்படுகிறது. அதிமுக வின் தேர்தல் அறிக்கையும் இதே அடிப்படையில் தான் தயாரிக்கப் பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியும் முக்கியமானது என்பதை அதிமுக தலைமை அறிந்திருப்பதால், ஒவ்வொரு தொகுதி யிலும் மக்கள் செல்வாக்குப் பெற்ற வேட்பா ளர்களை முதலமைச்சர் களத்தில் இறக்கியிருக் கிறார்.

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் அஇஅதிமுக வேட்பாளராக திரு. அரி அவர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார். இவர் திருத்தணி மண் ணின் மைந்தர். அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதிக்குச் சொந்தக்காரர். சென்ற முறை திமுக ஆட்சிக்கு வர காரணமாக இருந்த தேர்தலில், திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து இடத் திலும் அஇஅதிமுக வெற்றி வாய்ப்பை இழந்த நேரத்தில் திருத்தணித் தொகு தியில் அதிமுக சார்பில் போட்டி யிட்டு வெற்றி பெற்று அன் றைய சட்டமன்றத்தில் திமுக அரசிற்கு எதிராகக் குரல் கொடுத்து, தமிழகம் முழுவதும் புகழ் பெற்று விளங்கினார்.

தான் அதிகாரத்தில் இருந்தா லும் இல்லா விட்டாலும், கட்சிப் பொறுப்பில் இருந் தாலும் இல் லாவிட்டாலும் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் என்ற முறையில் பல உதவிகளைச் செய்து வருகிறார். குறிப்பாக முதலமைச்சரின் பிறந்த நாளை ஆண்டுதோறும் மிகவும் சிறப் பாக நடத்தி, ஏழை எளியவர் களுக்கு சேலை, சைக்கிள், தையல் இயந்திரம், சலவை இயந்திரம், மூன்று சக்கர வாகனம் என்று பல்வேறு உதவிகளைச் செய்து மக்கள் மனதில் இடம் பிடித்தவர். மாணவர்களுக்கான உதவி களையும், அப்பகுதி மக்களுக்கான வேலைவாய்ப்பு களையும், சுயதொழிலுக்கான பயிற்சிகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறார் திரு. அரி அவர்கள்.

திரு. அரி அவர்களுக்கு அவரது சமுதாய மக்கள் ஒட்டுமொத்தமாக இவருக்கு வாக்களிப் பார்கள் என்ற நம்பிக்கையிலும், அவரது தனிப் பட்ட செயல்பாடுகளாலும், உதவும் குணத்தா லும் அத்தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்திற்குச் செல்வார் என்று அத்தொகுதி மக்கள் நம்புகின் றனர். நடப்பு எம்பி ஜெகத்ரட்சகன் மக்களை விட்டு வெகுதூரத்தில் இருக்கிறார் என்றும், அதனால் திமுக இரண்டாம் இடத் திற்குச் சென்றுவிடும் என்றும் கூறப்படுகிறது.

பதினாறாவது நாடாளுமன்றத்தின் அஇ அதிமுக உறுப்பினராக திரு. அரி அவர்கள் டெல்லி செல்வது உறுதியாகியிருக்கிறது. ◆

# மதுவினாலும் இலவசங்களாலும் தமிழன் மானம் இழந்து வாழ்கிறான்

## "சாதனை மனிதர் அன்புமணி இராமதாசு" என்ற புத்தக வெளியீட்டு விழாவில்

## திரு தேவசகாயம் ஐ.ஏ.எஸ். பேச்சு

பி.எம்.பாலா

"சாதனை மனிதர் அன்புமணி இராமதாசு" என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. பசுமைத்தாயக அமைப்பின் செயலாளர் அருள் வரவேற்றார். புத்தகத்தை ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு வெளியிட ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி தேவசகாயம் பெற்றுக் கொண்டார்.

புத்தகத்தைப் பெற்றுக்கொண்ட முன்னாள் ஹரியானாவின் தலைமைச்செயலாளர் திரு தேவசகாயம் ஐ.ஏ.எஸ். அவர்கள் பேசியதாவது. அன்புமணி இராமதாசின் சாதனைகளை இந்தப் புத்தகம் கூறுகிறது அவர் இனி என்ன சாதனைகள் செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். நான் வடமாநிலங்களில் பணியில் இருந்தபோது தமிழர்களை ஒருமையில் பேசுவார்கள். இப்போது வெளி மாநிலங்களில் தமிழர்களை அசிங்கமாகப் பேசுகிறார்கள். அரசாங்க சாராயத்திலும் அரசாங்க இலவசங் களிலும் வாழ்பவர்கள் தமிழர்கள் என்று பேசுகிறார்கள். சாராயத்தை விற்று அரசு நடத்துவது தமிழகம் மட்டும்தான். சாராயத் தாலும் இலவசங்களாலும் தமிழன் மானமிழந்து மரியாதையிழந்து வாழ்கிறான். பொங்கல் நாட்களில் இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு வரிசையாக நிற்கிறார்கள். என்னவென்று பார்த்தால் ஒரு வேட்டியும் ஒரு சேலையும் 100 ரூபாய் பிச்சையும் கொடுக்கிறார்கள். இந்த நிலை எங்கும் இல்லை.

தமிழ் இலக்கியங்களில் மானம் மரியாதை பற்றிப் பேசப்படுகிறது. உயிரைவிட மானம் பெரிது என்றுதான் சொல்லப்படுகிறது. பெரியார் சுயமரியாதை பற்றிப் பேசினார். எல்லாவற்றையும் வாங்குவதற்கு மக்களுக்கு தகுதி உண்டு. ஆனால்



இலவசமாகப் பெறுவது மானத்தை, மரியாதையை விற்பதாகும். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று அண்ணா சொன்னார். அந்த மூன்றும் இப்போது இல்லை. தமிழ்நாடு என்றால் யாருக்கும் இப்போது பயமில்லை. பாதிப்பேர் சாராயத்தில் விழுந்து கிடப்பவர்கள், பாதிப்பேர் இலவசங்களை நம்பி வாழ்பவர்கள். இப்போது அவசரத்தேவை, தமிழர்களுக்கு தன்மானத்தைக் கொண்டுவர வேண்டும்.

தனி மனிதனுக்கான தேவைகளுக்கு அரசு உதவி செய்யத் தேவையில்லை. மனித சமூகத்துக் கூத் தான் அரசு தேவை. மின்சாரம் கொடுக்க வேண்டும், குடிநீர் கொடுக்க வேண்டும், சாலைகள் அமைக்க வேண்டும், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி இவைகளே அடிப்படைத் தேவைகள். இவைகளைத் தான் அரசு செய்து தர வேண்டும். வேலை வாய்ப்பு களை உருவாக்கிட வேண்டும்.

திருமங்கலம் பார்முலா, ஏற்காடு பார்முலா இவைகளை இந்தியா முழுவதும் கொண்டு வரப்போ கிறார்களாம். ஊழலில் பங்காளியாக்கு கிறார்கள். பிரியாணி, சாராயம் போன்றவைக ளுக்கு வாக்களிக்கும் அசிங்கம் இங்குதான் இருக்கிறது. இது ஆந்திரா, கர்நாடகாவிலும் பரவிவிட்டது. மக்கள் கேட்கிறார்கள் பணம் வாங்கினால் என்ன? நம்ம பணம்தானே என் கிறார்கள். அடிப்படை உரிமையை விற்கிறீர்கள். நீங்கள் அதை விற்ற பின்னால் உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. இரண்டாவதாக மானத்தையும் சேர்த்து விற்கிறாய்.

இந்தியா வளர்ந்த நாடு என்றால், 50 விழுக்காட்டிற்கு மேல் இலவசத்தில் வாழ்வது ஏன்? எது வளர்ச்சி? அன்புமணிக்கு நான் விடுக்கும் வேண்டுகோள், தன்மானத்தை திரும்பக் கொண்டுவரப் பாருங்கள். அது வந்தால் எல்லாம் வந்துவிடும். மின்சாரம் இருக்கிறது, விநியோகம் சரியாக இல்லை.

எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் 8 தலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். ஊழலுக்கு முதல் காரணம் குழப்பம்தான். மின்சார வாரியத்தில் இதுதான் நடக்கிறது. தேசியப் பாதுகாப்பு சுகாதாரத் திட்டம், 108 திட்டம், புகையிலை ஒழிப்புத் திட்டம் போன்றவை அன்புமணி செய்த சாதனைகள், நான் அவரைப் பாராட்டுகிறேன். என்று பேசினார்.


அன்புமணி இராமதாசு ஏற்புரை வழங்கினார். இந்தப் புத்தகத்தை கொண்டு வர வேண்டும் என்று முயற்சி எடுத்து எங்களை அதற்கான வேலைகள் செய்ய ஊக்குவித்தவர் அய்யா அவர்கள்தான். நான் செய்த அனைத்தையும் எழுத வேண்டும் என்றால் இன்னொரு புத்தகம் பெரியதாக வரும். 35 வயதில் மிகப்பெரிய பதவியை ஐயா எனக்குக் கொடுத்தார். ஓராண்டு பணியைச் சரியாகச் செய்தால்தான் தொடர்ந்து அந்தப் பதவியில் இருக்க முடியும் என்ற நிபந்தனையுடன்தான் கொடுத்தார்.

பாராளுமன்றத்தில் முதல்நாள் கேள்வி எனக்கு வந்தது. மொத்தம் 20 கேள்விகள் வந்தால் 12 கேள்விகள் எனக்குதான் வரும். நான் காலை 6 மணிக்குத் தூங்கி 8 மணிக்கு எழுந்துவிடுவேன் கேள்வி களுக்கான பதிலை தயார்செய்வேன். என்னை சோம்நாத் சாட்டர்ஜி பலமுறை பாராட்டி யிருக்கிறார். ஆசா திட்டம் எனக்குப் பிடித்த திட்டம் 7500 ஆசாக்களை நியமித்தோம். 2004 ஆம் ஆண்டு குழந்தைகள் இறப்பு விகிதம் 69 விழுக்காடு. நான் வெளியே வரும்பொழுது அது 44 விழுக்காடாக குறைந்திருந்தது. தாய் இறப்பு விகிதம் 300 ஆக இருந்தது. அதை 150க்கு கொண்டு வந்தேன்.

அமெரிக்காவில் 911 என்ற எண்ணுக்குப் பேசினால் 2 நிமிடங்களில் 4 ஆம்புலன்சுகள்

**“தமிழ் இலக்கியங்களில் மானம் மரியாதை பற்றிப் பேசப்படுகிறது. உயிரைவிட மானம் பெரிது என்றுதான் சொல்லப்படுகிறது. பெரியார் சுயமரியாதை பற்றிப் பேசினார். எல்லாவற்றையும் வாங்குவதற்கு மக்களுக்கு தகுதி உண்டு. ஆனால் இலவசமாகப் பெறுவது மானத்தை, மரியாதையை விற்பதாகும்.”**

வந்துவிடும். அதைப்போல் 108 தொடாபு கொண்டால் பீகார் போன்ற இடங்களில் 10 நிமிடத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்து விட வேண்டும் என்று திட்டம் போட்டேன். தமிழ் நாட்டில் 2 நிமிடத்தில் வரவேண்டும் என்று முடிவு செய்தோம். 108 என்ற எண் இராணுவத்தில் இருந்தது. அதை கொண்டு வர ஆ. ராசா உதவி செய்தார். புகையிலையை ஒழிப்பதில் நான் எடுத்த முடிவிற்கு 4 முதலமைச்சர்கள் உட்பட 120 எம் பி க்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பிரதமர் மன்மோகன் சிங்




எனக்கு தடை சொல்லவே இல்லை. இதில் மட்டுமல்ல நான் கொண்டு சென்ற திட்டங்கள் எதற்கும் ,அவர் தடை விதிக்கவில்லை. டெல்லியில் என்னை ஓ. பி. சி யாகவே பார்த்தார்கள். எங்களை தலித்து களுக்கு எதிரானவர்கள் என்றார்கள்.

நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல. உயர்கல்வி நிலையங்களில் பல ஆண்டு களாக இட ஒதுக்கீடு இல்லை, சங்கரானந்த் போன்ற தலித் அமைச்சர்கள் இருந்தும் அதைச் செய்யவில்லை. நான் சண்டை போட்டு வாங்கிக் கொடுத்தோன். 6000 தலித்துகள் இட வாய்ப்புப் பெற்றனர். நான் எந்தக் கட்டிடத்திற்கும் பெயர் வைத்ததில்லை. திறப்பு விழாவிற்கு நான் வர இயலவில்லை என்றாலும் கட்டிடம் திறக்கப் பட்டு வேலை நடக்க வேண்டும் என்று ஆணையிட்டிருந்தேன். அய்யா அவர்கள் தேசிய சித்த மருத்துவமனைக்கு அயோத்திதாசர் பெயர் வைக்க வேண்டும் என்றார்கள். ராம்விலாஸ் பஸ்வான், திருமாவளவன், அயோத்திதாசர் பேத்தி ஆகியோரை அழைத்து அந்த இடத்திற்கு அயோத்திதாசர் பெயரை வைத்தோம்.

எய்ம்ஸ் மருத்துவமனையில் எனக்கும் வேணுகோபாலுக் கும் பிரச்சினை, அவர் எனக்கு மாமனா மச்சானா? அங்குள்ள தலித் மாணவர் களுக்கு சாப்பிட தனி இடம், அவர்கள் விளையாட தனியிடம் என்று பாரபட்சம் காட்டப்பட்டது. நான் அவரிடம் சண்டை போட்டேன். வெற்றி பெற்றேன். அதற்காக எஸ் சி, எஸ் ட்டி கமிஷன் தலைவராக இருந்த பூட்டாசிங் எனக்கு சென்னையில் பாராட்டு விழா நடத்தினார். கேன்சருக்காக 5 வருடத்திற்கு 320 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது.

நான் 3600 கோடியாக உயர்த்தினேன். புற்றுநோய் ஒரு செலஷமிக்க நோய் என்பதால் ஸ்ட்ரெம் செல்ஸ் பற்றி உலகத்திலேயே மிகப் பெரிய மாநாடு நடத்தினேன். உலகில் உள்ள விஞ்ஞானிகள் அனைவரையும் அழைத் திருந் தோம். முதியவர்களுக்கு என்று ஒரு இன்ஸ் டிட்யூட் டெல்லி யிலும் சென்னையிலும் கொண்டு வந்தேன். இங்கே இருந்த அரசு திருப்பி அனுப்பியது. ஜிப்மருக்கு 1000 கோடி நிதி ஒதுக்கினேன். பில்கேட்ஸ் என்னிடம் பேசினார். எனக்கு விருந்து பரிமாறினார்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பூரண மதுவிலக்கு என்பதுதான் முதல் கையெழுத்து. இலவசங்கள் கொடுக்க மாட்டோம். தரமான கல்வி, தரமான சுகாதாரம், விவசாயிகளுக்கு இடுபொருட்கள்

இலவசம், ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு டிராக்டர் இலவசம் போன்றவைகளை நிறைவேற்றுவோம் என்றார்.

நீதியரசர் சந்துரு அவர்களைப் பேச அழைத்த வழக்கறிஞர் பாலு அவர்கள் செங்கோல், டவாலி, போலீஸ், மைலார்ட், லார்ட்சிப் என்பவைகள் எல்லாம் வேண்டாம் என்று நிறுத்திய ஒரு நீதியரசர் சந்துரு அவர்கள். தமிழில் வாதிடலாம் என்று அனுமதி அளித்தவர், ஆறரை ஆண்டு களில் 96000 வழக்குகளுக்கு தீர்வு கண்டு சாதனை படைத்தவர். பணிநிறைவு விழா வேண்டாம் என்று மறுத்தவர், ஓய்வுபெற்ற அன்றே தொடர்வண்டியில் பயணம் செய்தவர் என்று அவரது சிறப்பைக் கூறி பேசுமாறு அழைத்தார்.

மருத்துவர் இராமதாசு அவர்கள் எனது கட்சிக்காரர், இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று அரசு முடிவுசெய்த போது அதை எதிர்த்து வழக்குத்தொடுத்தார். அந்த வழக்கை நான்தான் நடத்தினேன். அதில் இடைக்கால தடை உத்தரவு பெற்றோம். அந்த உத்தரவு ஆங்கிலத்தில் இருந்தது. அதை அகதி களுக்கு தமிழில் கேட்டோம், கொடுக்கப்பட்டது. சாதனைகளை நாம் சொல்லாவிட்டால் சாதனைகளுக்கு பல தகப்பன்மார்கள் வந்து விடுவார்கள்.

மதுவிலக்குச் சட்டத்திலேயே மது விற்பதற்கு அனுமதி இருக்கிறது. இது கேவலம். எனது ஓய்வுக்குப் பின் மது அழிப்பு தான் எனது பணி. குமரி அனந்தன் மது ஒழிப்புக் காக ஒரு நிகழ்ச்சி நடத்தினார் அதை நான் கொடி அசைத்து துவக்கி வைத்தேன். மதுஒழிப்பு என்றால் அங்கே நான் இருப்பேன். "விழி தமிழ் நாடு இயக்கம்" மூலமாக மது விலக்கை வலியுறுத் துகிறோம். தமிழகத்தில் போட்டியிடும் வேட் பாளர்களிடம் பூரண மதுவிலக்கு கொண்டு வருவோம் என்று உறுதிமொழி கையெழுத்து வாங்க வேண்டும் என்றார்.

இறுதியாக பேசிய மருத்துவர் இராமதாசு அவர்கள், தேவசகாயம் அவர்கள் கேட்டார் நாட்டுக்கு என்ன செய்யப் போகிறாய் என்று? அவர் எனக்கு ஆலோசகர். அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் எனக்கு ஆலோசகர். அன்புமணியின் சாதனைகளில் எனக்கு மிகவும் பிடித்தது தேசிய கிராமப்புறச் சுகாதாரத் திட்டம்தான். மூன்று உலகளாவிய விருதுகளை அன்புமணி பெற்றிருக் கிறார். நீதியரசர் எனது வழக்குக்கு வாதாடி யிருக்கிறார் என்பதை நான் மறந்து போய்விட்டேன். 34 ஆண்டுகளாக மதுவை ஒழிக்க நான் இயக்கம் நடத்திக் கொண்டிருக்கிறேன்.

32 மாவட்டங்களில் மது ஒழிப்பு மாநாடு நடத்தியிருக்கிறேன். இதை யெல்லாம் ஊடகங் கள் மறந்து விட்டன. ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் 500க்கும் மேலான ஏரி குளங்களில் நான் தூர்வாரியிருக்கிறேன். வழக்கறி ஞர் பாலுவின் ஊரான கங்கை கொண்ட சோழபுரம் பொன்னே ரியில் தூர் வாரியிருக்கிறேன். இராம நாதபுரம் மாவட்டத் தில் உள்ள தமிழகத்தின் இரண்டாவது பெரிய கண் மாயாகிய இராஜசிங்க மங்கலம் கண்மாயில் தூர்வாரியிருக் கிறேன். இவற்றை யெல்லாம் நான் செய்தும் என்னை வன்னியராகத் தான் பார்க்கிறார்கள். அப்படித் தான் எழுது கிறார்கள்.

ஐ நா மன்றத்திற்குள் சென்று மூன்று முறை ஈழத்தமிழர்களுக்கான மனுவை கொடுத்து வாதாடியிருக்கிறோம். சிலர் வெளியில் மனுக் கொடுத்துவிட்டு வருகிறார்கள். நாங்கள் அப்படி அல்ல. 2 மாதத்தில் 54 சட்டமன்றத் தொகுதி களில் மதுவிலக்கு பெண்கள் மாநாடு நடத்தி முடித்திருக்கிறேன். ஒவ்வொரு கூட்டத் திற்கும் 2000, 3000 பெண்கள் வருகிறார்கள். உனக்கு ஓட்டுப் போடுகிறேன். சாராயத்தை ஒழி என்கிறார்கள். நீதியரசரிடம் சொல்லிக் கொள்கிறேன். உங்களுடன் நானும் மதுஒழிப்புக் காக சேர்ந்து போராடுவேன்.

இது நாடல்ல குடிகார தமிழ்நாடு. இந்நிலை மாற உங்களுக்கு நான் ஆதரவு தருவேன். 44 சமூக, ஆன்மிகத் தலைவர்களுடன் சென்று மதுவை ஒழிக்கு மாறு கலைஞரிடம் கேட்டேன். அவர் விற்பனை நேரத்தில் ஒரு மணி நேரத்தைக் குறைத்தார். மருத்துவர் அய்யாவின் கொள்கை தான் எனது கொள்கையும் என்றார். மதுவை ஒழியுங்கள் என்றால் தத்துவம் பேசுகிறார்கள். சுற்றிலும் நெருப்பு நடுவில் எப்படி கற்பூரம் இருக்க முடியும் என்கிறார்கள். இருக்க முடியும் என்பதுதான் எங்களது கூற்று. சமச்சீர் கல்விக்காக நாங்கள் எவ்வளவு போராடினோம் என்பது தமிழகத் திற்குத் தெரியும் என்று பேசினார்.

வழக்கறிஞர் கே. பாலு நிகழ்வை சிறப்பாகத் தொகுத்தளித்தார். கவிஞர் ஜெயபாஸ்கரன், இயக்குநர் தங்கர் பச்சன், முற்றம் இதழாசிரியர் விசவனூர் வே. தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

◆

# இலக்கணங்களின் வழி நிற்கும் ஒப்பற்ற தமிழ் மொழி 16

**இயற்றமிழன்**

தமிழில் முதனிலைத் தொழிற்பெயரென்றும், முதனிலை திரிந்த தொழிற்பெயரென்றும் ஒரு வேறுபாடு காணப்படுகின்றது. பிடி, அடி முதலியன முதனிலைத் தொழிற்பெயர்கள். ஊண், கேடு முதலியன முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள். உண், கெடு என்னும் அடிச்சொற் களைப் பொருள் வேறுபடுமாறு எடுத்தொலித்த காரணத்தால் நாளடைவில் அவற்றின் உயிர் நீண்டு, ஊண், கேடு எனத் திரிந்தன எனலாம். பிடி, அடி முதலியவற்றில் அவ்வாறு எடுத்த லோசை சிறக்காமையால், அவை உயிர் நீளாமல் நின்றன எனலாம். இவ்வாறு எடுத்தல் முதலிய வேறுபாடுகளில் சொற்களின் உருவமும் திரியக் காண்கின்றோம்.

'போகிறான்' என்ற சொல்லை 'போறா' என ஒலிக்கின்றனர். இங்கும் ஓசை வேறுபாட்டால் சொல்லுருவம் மாறுதலைக் காணலாம். 'போ' என்னும் பகுதியில் எடுத்தலோசை இருத்தலால் அது மாறவில்லை. 'கிறான்' என்ற மற்ற அசையில் எடுத்தலோசையின்றிப் படுத்தலோசையும் ஈற்றில் நலிதலோசையும் அமைந்தமையால் 'றா' தெளிவாகக் கேட்க, இடைநிலையின் ககர மெய்யும் இகர உயிரும் இறுதி னகரமெய்யும் மறைகின்றன. ஆயினும் அதன் அறிகுறியாக 'றா' என்பதில் உள்ள ஆகார உயிர் மூக்கின் உயிராக ஒலிக்கப்படுகின்றது ( மூக்கினமாக மெய்கெடும் சொற்களில், அதனை அடுத்து நிற்கும் உயிர் மூக்கினமாக ஒலிக்கப்படும் என்பது ஒலி நூலார் கண்ட உண்மை. அதனால் "அவ (ன்) போறா" என்ற சொற்றொடரின் வினைமுற்றின் இறுதியில் உள்ள ஆகார உயிர் மூக்கினமாக ஒலிக்கின்றது) இவ்வாறே வினை முற்றுக்கள் பலவற்றில் பகுதியொழிந்த அசைகள் திரிந்தும் கெட்டும் போதலைக் காணலாம். வினைமுற்றுக்களின் பகுதிமட்டும் திரியாதும் கெடாதும் நிற்கும் காரணம், முற்கூறியவாறு எடுத்தலோசை அதனிடத்து நிற்ற லேயாகும்.

பல அசைகளைக் கொண் டுள்ள ஒரு சொல் லில், அழுத் தம் இன்றி ஒலிக்கப்படும் உயிரொலிகள் முதலில் மென்மையாக ஒலிக்கப்பட்டு, பின்னர் நாளடை வில் ஒலிக்கப் படாமலே



போதல் உண்டு. அவ்வாறு உயிரொலிகள் மறையும்போது, அவற்றைச் சார்ந்த மெய்யெழுத்துக்களும் மெல்ல மெல்ல ஒலிக்கப்படாமல் போகும். இத்தகைய மாறுதலால், நீண்ட பல அசைச்சொற்கள் குறுகிக் குறுகி ஓரசைச் சொற்களாகிவிடும். சீன மொழியில் ஓரசைச் சொற்கள் பெரும்பான்மையாக இருப்பதற்கும், ஆங்கில மொழியில் ஓரசைச் சொற்கள் மிகுந்துவருவதற்கும் காரணம் இதுவே. Strife, knife, stretched, pledged, strength, wealth முதலான ஆங்கிலச் சொற்களில் பல எழுத்துக்கள் இருந்தும், அவை ஓரசைச் சொற்களாகவே இருத்தல் கருதத்தக்கது. தமிழ் முதலான மொழிகளில் நெடுங்காலமாகவே தெளிவாக வழங்கிவந்த ஒலிமுறை உள்ளது.

தொன்று தொட்டே ஒலி முறைப்படி அமைந்த எழுத்து முறையும் உள்ளது உண்டோ இல்லையோ என்று ஐயுறக்கூடிய நிலையிலேயே எடுத்தல் படுத்தல் வேறுபாடுகள் நுட்பமாக அமைந்து அளவுகடந்து பெருகாமல் உள்ளன.

அதனால் இம்மொழிகளில் பல அசைச் சொற்கள் ஓரசைச்சொற்களாக மாறும் மாறுதல் அவ்வளவாகக் காணப்படவில்லை. இரண்டு, நிரம்ப முதலான மூவகைச் சொற்கள் ரெண்டு, ரொம்ப என ஈரசைச் சொற்களாக ஒலிக்கப் படினும் அவை கொச்சை ஒலிகளாகவே கருதப்படும் நிலைமை உள்ளது. மகன் மகள் முதலான ஈரசைச் சொற்கள் மோன் மோள் என ஓரசைச் சொற்களாக மலையாளத்தில் ஒலிக்கப்படுதலும் கொச்சையாகவே கருதப்படுகிறது. உவகை ஓகை என்றும், சிதல் செல் என்றும் அசை குறைந்து திரிந்த திரிபுகள் சில தமிழில் உள்ளன. அவை சிறு பான்மையே ஆகும்.

செய்யுளில், மோனை எதுகை என்னும் தொடையமைந்த சொற்களில் முதலசைகள் மற்ற அசைகளைவிட எடுத்தொலிக்கப்படுகின்றன. ஒவ்வொரடியிலும் பெரும்பான்மையும், முதற் சீரும் மூன்றாம் சீரும் மோனையாக அமைதலின் அவற்றின் முதலசைகள் எடுத்தொலிக்கப் பெறும். ஒவ்வொரு செய்யுளிலும் அடிதோறும் முதலோசையில் எதுகை அமைதலின் அம் முதலசைகளும் எடுத்தலோசை பெற்றவையாகும்.

ஒரு சொல்லின் ஒலியழுத்தத்தில், சொல்லின் முதனிலை இறுதிநிலைகளை எடுத்தும் படுத்தும் ஒலித்தல் உண்டெனக் கண்டோம். ஒரு வாக்கியத்திலும் இவ்வாறே ஒலியழுத்தம் (pitch) உண்டு. வாக்கியத்தை ஒலிக்கும் போது, ஒரு சொல்லை எடுத்தும் ஒரு சொல்லைப்படுத்தும், ஒலித்துப் பொருள் வேறுபாடு உணர்த்தும் முறை தமிழில் உள்ளது. நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கு உரை செய்யும் போது பல சூத்திரங்களில் இவ்வாறு சொற்களை எடுத்தும் படுத்தும் ஒலித்துப் பொருள் காண்கின்றார். பேச்சுவழக்கில் இம்முறை இயல்பாக அமைந்துள்ளது. நான் பூனையைப் பார்த்தேன் என்னும் வாக்கியத்தில் உள்ள மூன்று சொற்களில் ஒன்றை எடுத்தும் ஏனையவற்றைப்படுத்தும் ஒலித்து மூன்று வேறு வேறு பொருள்களை உணர்த் தலாம்.

1) நான் என்னும் எழுவாயை எடுத்தொலித் தால், நான்தான் பார்த்தேன், வேறு யாரும் பார்க்கவில்லை, என்று பொருள்படும்.

2) பூனையை என்னும் செயப்படுபொருளை எடுத்தொலித்தால், நான் வேறொன்றையும் பார்க்கவில்லை, பூனையை மட்டும் பார்த்தேன் என்று பொருள்படும்.

3) பார்த்தேன் என்ற சொல்லை மட்டும் எடுத்தொலித்தால் நான் வேறொன்றும் செய்யவில்லை. பூனையைப் பிடிக்கவில்லை, வாளாபார்த்தேன் என்று பொருள்படும்.

வாக்கியம் முழுதினையும் ஒலித்திடும்போது எடுத்தல் படுத்தல் இல்லாமலும் ஒருவகை வேறுபாட்டை உண்டாக்கலாம். இதுவும் பேச்சுவழக்கில் இயல்பாக அமைந்தது "நீ சொன்னது மெய்" என்னும் வாக்கியத்தை ஒலிக்கும் வகையால் 1) நீ சொன்னது உண்மைதான் என்ற எளிய பொருளையும் 2) நீ சொன் னது பொய் என்ற எதிர் மறைப் பொருளையும் உணர்த்தலாம். இவ்வாறே ஒவ்வொரு வாக்கியத்திற்கும் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் ஒலிவகை உள்ளது.

இந்த எதிர்மறைப் பொருளை என்னுங்குறிப்போடு கலந்து உணர்த்துதலும் உள்ளது. நீ எவ்வளவு பெரியவன்! என்னும் வாக்கியத்தை அவ்வாறு ஒலித்துக் காணலாம்.

"அவன் இங்கே வந்தான்" என்னும் வாக்கியம் செப்பாக வழங்குவதே பெரும்பான்மை. ஆதலின்

அந்த வாக்கியத்தை ஒலிக்கும் வேறுபாட்டால், "அவன் இங்கே வந்தானோ?" என்ற வினாவாகப் பொருள் பயக்கச் செய்யலாம். இவ்வாறே ஆ ஓ என்ற வினா இடைச்சொல் இல்லாமல், நீ வந்தாய் முதலான வாக்கியங்களை வேறுபட ஒலித்து "நீ வந்தாயா" முதலான வினாப் பொருளை உணர்த் தலாம்.

"அவன் பேசினான்" என்ற வாக்கியத்தை, அவன் பேசினான், அவன் பேசினான்? அவன் பேசினான்! என மூவகைப் பொருளில் பயன்படுத் தலாம். அவனுடைய செயலை எடுத்துரைப்பது முதல் வாக்கியம். செயலைப் பற்றி கேட்டறியும் வினா இரண்டாம் வாக்கியம். அவன் பேசியிருக்க மாட்டானே, அவன் எப்படிப் பேசினானோ தெரியவில் லையே என்ற வியப்பைப் புலப்படுத்து வது மூன்றாம் வாக்கியம்.

இவ்வாறு எதிர்மறைப் பொருளும் எள்ளல் பொருளும் வினாப் பொருளும் வியப்புப் பொரு ளும் உணர்த்தும் இடைச்சொற்கள் இன்றியே அவ் வப்பொருள் உணர்த்தப்படல் காணலாம். அவ்வப் பொருளை உணர்த்துவது ஒலி வேறுபாடே ஆகும்.

சொற்களிலும் வாக்கியங்களிலும் உள்ள இத்தகைய ஒலியழுத்தங்களையும் சில மொழி களில் முதலொலிகளாகவும் சில மொழிகளில் வகையொலி களாகவும் கொள்ளலாம் என்கிறார் அறிஞர் புளும்பீல்ட் பேச்சு மொழியில் அவை அத்துணை இன்றியமையாதனவாக இருக்கின் றன.

"இல்லை" என்ற சொல்லையே வெவ்வேறு பொருளுணர்ச்சிக்கு ஏற்றவாறு வெவ்வேறு வகையாக ஒலிக்கக் கேட்கின்றோம். ஒருவர் கூறியவற்றைக் கேட்டவர், கவலை இன்றி மறுக்கும் போது ஒருவகை, அழுத்தம் திருத்தமாக மறுக்கும் போது மற்றொருவகை, வியந்து கேள்வியுறும் போது இன்னொருவகை, வினாவாகக் கூறி மறுமொழி எதிர்பார்க்கும் போது ஒருவகை, தான் மறுத்து ரைக்கத் தொடங்கும் தொடக்கத்திற்குப் பயன் படுத்தும் போது வேறொருவகை என இவ்வாறு பல்வேறு வகையில் அந்த ஒரு சொல்லே ஒலிக்கப்படு கின்றது. இத்தகைய ஒலி வேறுபாடு எழுத்து முறை யால் புலப்படுத்த இயலாதது எனினும் பேச்சு மொழிகள் எல்லாவற்றிலும் இது இயல்பாக அமைந்துள்ளது.

தொடரும்.

◆



# மழை

ஆவிநிறை கார்முகிலின் நிலையழிந்த நீர்த்துளிகள்
வானிலிருந்து வீழுமெழில் மழையே! – நீ
உருகிவிழும் தூயவெள்ளி இழையே!

உலகமதில் உயிர்களுக்கு அமுதமென நீரளித்தே
இலைம்பஞ்ச போல்மிதக்கும் முகிலே! – வானில்
உலவுகின்ற மெல்லியபூந் துகிலே!

நின்பொழிவால் நீர்நிறையும் விளையயிறால்
நெல்விளையும்
நல்லுழைப்பால் ஊர்சிறந்தே ஓங்குமே! – செல்வம்
தன்னுழைப்பைத் தந்துவகைத் தாங்குமே!

மேனுருக்கும் வெயிலிலும் கால்தகிக்கும் தரையினிலும்
வானிருந்தே இறங்கிகூடு தணிக்கிறாய்! – நீ
வான் மொழியும் அமுதமென இனிக்கிறாய்!

ஆழ்கடலின் நீரெடுத்து மாமழையாய்ப் பிறப்பெடுத்தே
ஆறுகுளம் ஏரிகளாய் ஆகிறாய் ஆகிறாய்! – நீராய்ப்
பாய்ந்துவயல் பயிர்களையே காக்கிறாய்!

கதிரவனும் நீர்நிலைநீர் ஆவிதனை மேலெழுப்ப
காற்றுவந்து தழுவிட நீ குளிர்வாய்! – நொடியில்
கனிந்துருகி மழையெனவே பொழிவாய்!

தமிழம். பன்னீர்செல்வம்.





# இலங்கையில் தமிழர்

முருகர் குணசிங்கம்

எட்டாவது அத்தியாயம் கி.பி.1850 களிலிருந்து 1900 ஆம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியில் தமிழர் பிரதேசம் எவ்வாறு பிரித்தானிய ஆதிக்கவர்க்கத்தினால் சீர்குலைக்கப்பட்டது என்பது பற்றியதாக அமைகிறது. அத்தோடு அவ்வாறான ஒரு நிலை தமிழர்களின் சுய எழுச்சிக்கும், தேசிய எழுச்சிக்கும் எவ்வாறு வித்திட்டது என்பது பற்றி மிகத் தெளிவாகக் கூறுகின்ற அத்தியாயமாக அமைகிறது.

ஒன்பதாவது அத்தியாயம் 1900களில் இருந்து 1948இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் அடைந்தது வரையுள்ள காலப் பகுதியைக் கொண்டது. இவ்வத்தியாயம் குறிப்பாக பிரித்தானிய ஆட்சியாளரின் புதிய அரசியற் சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றியும், அச் சீர்திருத்தங்கள் எவ்வாறு தமிழரின் அரசியற் சுதந்திரத்தை வெகுவாகப் பாதித்தது என்பது பற்றியும், தமிழர் தமது பாரம்பரியப் பிரதேசத் தின் அடையாளத்தை எவ்வாறு இழந்தனர் என்பது பற்றியும் உள்ள விடயங்களைப் பல முதந்தர ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டும், அரசியல் அறிஞர் களின் ஆய்வு களின் முடிவுகளை ஆதாரமாக் கொண்டும் எழுதப்பட்டது. தமிழர் தமது சுதந்திரத்தை இழந்த



16

நிலைமை இன்றுவரை தொடர்வதற்கும், தமிழர் படும் சொல்லொணாத் துயரங்களுக்கும் அடிப்படைக் காரணம் பிரித்தானியரின் ஆட்சியும், அவர்களின் அதிகாரமும், அவர்களின் தவறான அரசியல் அணுகு முறைகளும், அரசியற் சீர்திருத்தங்களுமே என்பனபற்றி மிகத் துல்லியமாகவும், தெளிவாகவும் பலவகையான முதற்தரவுகளின் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

இறுதியான பத்தாவது அத்தியாயம் 1948இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதில் இருந்து 1983 வரையுள்ள காலப் பகுதியை உள்ளடக்கியதாக அமைகிறது. இவ்விடயம்பற்றி பல்வேறு ஆய்வு நூல்கள் வெளிவந்ததன் விளைவாக மிகவும் சுருக்க மாகவும், தெளிவாகவும் மேற்படிக் காலகட்டத் தில் சிங்கள பெரும்பான்மை அரசுகள் எவ்வாறு தொடர்ந்து தமிழர்களின் அரசியல் உரிமையையும், மொழி, மத, கல்வி, பொருளாதார உரிமை களையும் திட்டமிட்ட முறையில் பறித்தன என்பது பற்றியும், தமிழருடைய பாரம்பரியப் பிரதேசங்கள் எவ்வாறாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாக அரசு உதவியுடன் மாற்றப்பட்டன போன்ற முக்கியமான விடயங்கள் பற்றியும் தெளிவாக விளக்குகின்ற அத்தியாயமாக அமைகிறது.

அத்தோடு மலையகத்தில் வாழும் இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமையைச் சட்டங்கள் மூலம் பறித்து அவர்களை நாடற்ற வர்களாக்கியதோடு, தமிழரின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு குறைத்தது என்பது பற்றிய விபரமும் மிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு, முதற்தர ஆவணங்களின் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள் ளது.

**❝ இறுதியாக 1976 இல் தமிழரின் அரசியல் பிரச்சினைகளுக்கு தனியான தமிழ் ஈழம் அமைப்பதே வழி என்ற முடிவுக்கு வந்தனர். இவ்வேளையில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் ஜனநாயக வழிமுறைகளில் போராடிச் சிங்கள பெரும்பான்மை அரசிடம் இருந்து எதனையும் பெறமுடியாது என்று திடமாக நம்பியதன் விளைவாக ஆயுதம் ஏந்திப் போராடித் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களை மீட்டெடுத்து தமிழ் ஈழம் அமைப்பது என்ற முடிவிற்கு வந்தனர். ❞**

இறுதியாக இவ்வாறான பெரும்பான்மைச் சிங்கள அரசின் பாரபட்ச நடவடிக்கைகளால் தமிழர் தமது உரிமைகளை இழந்த நிலையில், சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையின் கீழ் அவற்றை மீளப்பெறுவதற்காக முதலில், ஜனநாயக வழி முறைகளில் தொடர்ச்சியாக 1972 வரை போராடினர் என்பது பற்றி காலவரன் முறைப்படி நடைபெற்ற முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களை எடுத்துக்காட்டி விளங்க வைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக வழிகளில் போராடி சமஷ்டி ஆட்சி முறையின் கீழ், தமிழர் தாயகப் பிரதேசங்களாகிய வடக்கு கிழக்கிற்கு தனி நிர்வாக அமைப்பு முறையை ஏற்படுத்த முடியாமற்போன கட்டத்தில், 1972 இல் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தமிழ்த் தலைவர்கள் தள்ளப்பட்டனர். இறுதியாக 1976 இல் தமிழரின் அரசியல் பிரச்சினைகளுக்கு தனியான தமிழ் ஈழம் அமைப்பதே வழி என்ற முடிவுக்கு வந்தனர். இவ்வேளையில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் ஜனநாயக வழிமுறைகளில் போராடிச் சிங்கள பெரும்பான்மை அரசிடம் இருந்து எதனையும் பெறமுடியாது என்று திடமாக நம்பியதன் விளைவாக ஆயுதம் ஏந்திப் போராடித் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களை மீட்டெடுத்து தமிழ் ஈழம் அமைப்பது ன்ற முடிவிற்கு வந்தனர்.

இதன் விளைவாக தமிழீழ அரசியல் தலைவர்கள் பின்தள்ளப்பட்டு இளந்த தலைமுறையினர் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக் கொண்டனர். இவ்வாறான அரசின் நடவடிக்கைகளும், தமிழ் அரசியற் தலைவர்களின் ஜனநாயக வழிமுறையில் அமைந்த போராட்டங்களும், தமிழ் இளைஞர், யுவதிகளின் அரசியற் சிந்தனைகளும், அணுகுமுறைகளும் தமிழர் தேசியவாத எழுச்சியை மிக வேகமாக முன்னெடுத்துச் சென்றன.

மேற்படி காலகட்ட முக்கிய அரசியல் நிகழ்வுகளை காலவரன் முறைப்படி மிகவும் சுருக்கமாகவும், அதேவேளை எவரும் விளங்கக்கூடிய முறையிலும் தெளிவாக ஆராய்ந்தும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 1983 லிருந்து தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் தீவிரம் அடைந்து இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே இக்கால அரசியல் வரலாறு பற்றி ஆராய வேண்டியது எதிர்கால அரசியல் வரலாற்று மாணவர்களுக்குரிய மிகப் பெரிய பொறுப்பாகும்.

*அடுத்த இதழில்: தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும்.. (கி.மு. 300 கி.பி. 300)*

◆

# அப்பாவிகள் காவல் துறையினரிடம் சிக்கித் தவிப்பு!

சமீபகாலமாக, அப்பாவிகளை பொய் வழக்குகளில் சிக்க வைக்கும் நடைமுறை அதிகரித்துள்ளது. அப்பாவிகள் மீது காவல் துறையினர் உள்நோக்கத்துடன் அல்லது அரசியல் காரணங்களுக்காக பொய் வழக்குப் போடுவதும் கைது செய்வதும் பெருகி வரும் அவலம் தமிழகத்தில் காணப்படுகிறது. அப்பாவிகளை கிரிமினல் வழக்குகளில் வேண்டுமென்றே சிக்க வைக்கும் காவல்துறை யினருக்கு தண்டனை வழங்கி பாதிக்கப்பட்டவர் உரிய இழப்பீட்டை நீதி மன்றத்தின் மூலம் பெறத் தகுதி உடையவர்கள் என உத்தரவிட்டுள்ளது.

அப்பாவிகளை வழக்குகளில் சிக்க வைக்கும் காவல்துறையினரைத் தண்டிக்க வேண்டும் என உச்ச நிதிமன்றம் உத்தரவு.

கொலை செய்ததாக ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடந்தது. விசாரணையில் இது பொய் வழக்கு என தெரிய வந்துள்ளது. இதையடுத்து, குற்றம் சாட்டப்பட்ட நபரை விடுவித்த நீதிபதிகள் சி.கே.பிரசாத், ஜெஎஸ்.ஹேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவில், கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் போலீஸ் அதிகாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களது நடவடிக்கை அப்பாவிகளை பாதிக்கும் வகையில் இருந்துவிடக் கூடாது.

எந்த சூழ்நிலையிலும் நிரபராதிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. கிரிமினல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் நீதிமன்றத்தால் நிரபராதி என விடுவிக்கப்பட்டால், அந்த விசாரணையை நடத்திய காவல் அதிகாரியைத் தண்டிக்க வேண்டும். அவர்மீது நடவடிக்கை எடுத்து உரிய இழப்பீடு, பாதிக்கப்பட்டவருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறது. அப்பாவி களுக்கு எதிராகச் செயல்படுகிறவர்களை, இவ்விசயத்தில் தவறு செய்கிற காவல்துறை யினரை தண்டிக்க அனைத்து மாநில அரசுகளும் உரிய நடைமுறையை உருவாக்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

வழக்கறிஞர் S.V.Jai. இமயவரம்பன். B.sc., M.A., BL.,



## ஒவ்வொரு நாளும் விடிகிறது வாழ்க்கை விடியாமலே!

அனுதாபம் பெறத் துடிப்பது
செய்ய வேண்டியவற்றிலிருந்து
தப்பித்திடவே!
கடமைகளிலிருந்து
தப்பித்திடவே!

இதயம் கனக்கிறது
புவியின் இதயமான
உழவு
துடிக்க மறந்திடுமே
என்று
இதயம் கனக்கிறது.

உழவுத் தொழில்
செய்பவர்களை
மற்றோர்
தொழுது பின்செல்வர்
அய்யனின் அறிவுக் குறளில்
அந்தோ! அது
பொய்த்துவிடுமோ என்று
பதறுகிறது மனம்.
உழுதவர்கள்
எல்லாம் கீழே
வறுமைக் கோட்டிற்கு கீழே
உழவை விட்டவரெல்லாம்
மேலே
பொருளாதாரத்தின்
செல்லப்பிள்ளைகளாய்!
என் செய்வார்
உழவர்?
எழ நினைக்கின்றார்.
எழுதிய நிலத்தை
மறந்து மாற்றுத்
தொழில் தேடுகிறார்
இதயம் கனக்கிறது.

## செருப்பு

காட்டிலும்
மேட்டிலும் பயன்பட்டேன்
மனிதனுக்கு
அது ஒரு காலம்
கழிவு அறைகளில் மட்டும்
பயன்படுகிறேன்
இது ஒரு காலம்...

காலோடு நடந்தான்
ஒரு காலம்
காலின்றி மரக்காலோடு நடக்கிறான்
இது ஒரு காலம்.

ஒன்று பிறந்தால்
இன்னொன்று இறக்கும்
பகல் இரவு

**வைரி**



ஏழு தமிழர் விடுதலை விவகாரத்தில் இந்திய அரசின் தமிழர் விரோதப் போக்கைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் பலரும் சென்னை சாஸ்திரி பவனை முற்றுகை யிட்டனர்.

ராசீவ் கொலை வழக்கில் 23 ஆண்டுகளாக சிறையில் வாடும் ஏழு தமிழர்களை தமிழக அரசு விடுவிக்க சம்மதம் தெரிவித்த போதும் இந்திய அரசு உச்ச நீதி மன்றத்தில் மனு அளித்து தமிழர் களின் விடுதலையைத் தடுத்து நிறுத்தி உள்ளது. இது உலகத் தமிழர்களை கொதிப்படைய வைத்துள் ளது.

ராசீவ் கொலையில் நேரடியாக பங்குபெறாத இந்த ஏழு தமிழர்களும் 23 ஆண்டுகள் ஆயுள் தண்டனை அனுபவித்து விட்டனர். இதில் மூன்று பேருக்கு உச்சநீதிமன்றம் தூக்குத் தண்டனையை ரத்து செய்துள்ளது. இப்படி யான தீர்ப்பு வெளிவந்த பிறகும் இந்திய அரசு தொடர்ந்து தமிழர்களை தண்டிக்க நினைப்பது நியாயமில்லை.

இந்திய நடுவண் அரசின் தமிழர் விரோதப் போக்கை நாங்கள் கண்டிக்கின்றோம். ஏழு தமிழர்களை சிறையில் இருந்து தமிழர்கள் நாங்கள் விடுவிப்போம். எந்தத் தவறும் செய்யாத பேரறிவா ளன் தன்னுடைய வாழ்க்கையையே தொலைத்து விட்டு நிற்கின்றார். மற்றவர்களும் கொடுமையான ஆயுள் தண்டனை அனுபவித்து விட்டனர். இனி யாவது இவர்கள் நிம்மதியாக சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க இந்திய அரசு அனுமதிக்க வேண்டும். இந்திய அரசு தொடர்ந்து தமிழர்களை வஞ்சித்தால் தமிழர்களுக்கு இந்திய அரசின் மீதுள்ள நம்பிக்கை போய்விடும். அதனால் இந்திய அரசு தமிழர் விரோதப் போக்கை கைவிட்டு ஏழு தமிழர்களின் விடுதலைக்கு முட்டுக் கட்டையாக இருக்கக் கூடாது என்று இந்த முற்றுகைப் போராட்டத் தின் வாயி லாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தமிழர் முன்னேற்றக் கழகம் அதியமான், பண் பாட்டு நடுவம் ராஜ்குமார் பழனிச்சாமி, அக்னி வேளாளர் கூட்டமைப்பு, தமிழ் மணி, தமிழ்த் தேசியக் குடியரசுக் கட்சி, திருமாறன் தாய் மண் மீட்பு இயக்கம், புதுவை அழகர் தமிழர் களம் மற்றும் சுந்தரமூர்த்தி தமிழர் விடுதலைக் களம் உள்ளிட்ட பல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

**இராஜ்குமார் பழனிச்சாமி**

9566224027



5

# புரட்சிக்கவி

பாரதிதாசனார்


புரட்சிக்கவிஞர்

சித்தம் துடிக்கின்ற சேயின் நிலைமைக்கு
வெறி கொண்டலையும் நால்வருணம் ஏனிரங்கும்?

ரத்தவெறி கொண்டலையும் ராசன்மனம் ஏனிரங்கும்?
அத்தருணம் அந்த அமுதவல்லி ஏதுசொல்வாள்:

'வாளை உருவிவந்து மன்னன் எனதுடலை
நாளையே வெட்டி நடுக்கடலில் போடட்டும்,

காளை உன் கைகள்எனைக் காவாமல் போகட்டும்,
தாளை அடைந்தஇத் தையல்உள்ளம் மாறாதே!

ஆதரவு காட்டாமல் ஐய! எனைவிடுத்தால்
பாதரஷை போலுன்றன் பாதம் தொடர்வதன்றி,

வேறு கதியறியேன்: வேந்தன் சதுர்வருணம்
சீறும்எனில் இந்தஉடல் தீர்ந்தபின்னும் சீறிடுமோ?

ஆரத் தழுவி அடுத்தவினா டிக்குள்உயிர்
தீரவரும் எனினும் தேன்போல் வரவேற்பேன்!

அன்றியும்என் காதல் அமுதே! நமதுள்ளம்
ஒன்றுபட்ட பின்னர் உயர்வென்ன தாழ்வென்ன?

நாட்டின் இளவரசி நான்ஒருத்தி! ஆதலினால்
கோட்டை அரசன்எனைக் கொல்வதற்குச் சட்டமில்லை!

கோல்வேந்தன் என்காதற் கொற்றவனைக் கொல்லவந்தால்,
சேல்விழியாள் யான்எனது செல்வாக்கால் காத்திடுவேன்!

சாதி உயர்வென்றும், தனத்தால் உயர்வென்றும்,
போதாக் குறைக்குப் பொதுத்தொழிலா ளர்சமூகம்

மெத்த இழிவென்றும், மிகுபெரும்பா லோரையெல்லாம்
கத்தி முனைகாட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்

பாவி களைத்திருத்தப் பாவலனே நம்மிருவர்
ஆவி களையேனும் அர்ப்பணம்செய் வோம்! இதனை

நெஞ்சார உன்மேல் நேரிழையாள் கொண்டுள்ள
மிஞ்சுகின்ற காதலின்மேல் ஆணையிட்டு விள்ளுகின்றேன்!

இன்னும் என்ன? என்றாள், உதாரன் விரைந்தோடி
அன்னத்தைத் தூக்கியே ஆரத் தழுவினான்.

இன்ப உலகில் இருந்தவர்களும் நாள்கழிந்தார்.
பின்பொருநாள் அந்தப் பெருமாட்டி அங்கமெலாம்

மாறுபடக் கண்டு மனம்பதறித் தோழியர்கள்
வேறு வழியின்றி வேந்தனிடம் ஓடியே,

'மன்னவனே! உன்அருமை மங்கை அமுதவல்லி
தன்னை உதாரனுக்குத் தத்தம் புரிந்தாளோ,

காதல்எனும் இன்பக் கடலில் குளித்துவிட்ட
மாதிரியாய்த் தோன்றுகிறாள். மற்றதினை மேன்மைச்

சமூகத்தில் விண்ணப்பம் சாதித்தோம்' என்றார்.
அமைதியுடைய அரசன் அதன்உண்மை.

கண்டறிய வேண்டுமென்று கன்னிகைமா டத்தருகே
அண்டியிருந் தான்இரவில் ஆரும் அறியாமல்!

வந்த உதாரன்எழில் மங்கைக்கு கைகாது
தந்து தமிழில் தனிக்கா தலைக்கலந்து

பேசினதும், காத்திருந்த பெண்ணரசி வேல்விழியை
வீசினதும், முத்தம் விளைத்த நடைமுறையும்

கண்டானா அரசன்! கடுகடுத்தான்! ஆயிரந்தேள்
மண்டையிலே மாட்டியது போல் மனமுளைந்து

மாளிகைக்குச் சென்றான், மறுநாள் விடியலிலே
வாளில் விஷம்பூசி வைத்திருக்கச் சொல்லிவிட்டுச்

சேவகரைச் சீக்கிரம் உதாரனை இழுத்துவர
ஏவினான். அவ்வா றிழுத்துவந்தார் வேந்தனிடம்.


இச்சேதி ஊரில் எவரும் அறிந்தார்கள்:
அச்சமயம் எல்லாரும் அங்குவந்து கூடிவிட்டார்.

ஆர்ந்த கவியின் அரசனுயிர் இன்றோடு
தீர்ந்ததோ என்று திடுக்கிட்டார் எல்லாரும்.

ஈடற்ற நற்கவிஞன் இந்நிலைமை, அக்கன்னி
மாடத்தில் உள்ளஎழில் மங்கைக்கும் எட்டியதாம்.

அங்கே உதாரனிடம் மன்னன் உரைக்கின்றான்.
சிங்கா தனத்திலே சேர்த்து

தொடரும்...



# புதுப்பாடம்

இருங்கோவேள்

இவனுக்கு மட்டும் எப்படி இந்த எண்ணம் வருகிறது இவனால் மட்டும் எப்படி முடிகிறது என்று அவனை அறிந்தவர்கள் அனைவரும் பேசிக் கொண்டனர். மலர்மணன் முதுகலைப் படிப்பை முடித்து ஓராண்டுதான் ஆகிறது. அவனது பொதுநலச் சேவை இன்னும் அதிகமாகிப் போனது. பக்கத்து வீடு, எதிர்வீடு, தனது தெரு என்பதையும் தாண்டி அவனது பொதுச்சேவை தொடர்ந்து கொண்டே சென்றது. மலர்மணன் மனிதர்களுக்கு மட்டும் சேவைகள் செய்வதில்லை. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உதவி செய்தான். மனிதர்களைப் பார்த்துப் பயந்து ஓடும் விலங்குகள் பறவைகள் கூட மலர்மணனின் மனதோடு உறவாடின. அவன் நினைப்பதை அவைகள் புரிந்து கொண்டன என்றே சொல்ல வேண்டும்.

மலர்மணன் நடந்தேதான் கல்லூரிக்குச் சென்று வந்தான். அப்படிச் செல்லும்போது வழியில் ஒரு வீட்டின் அருகே எலி ஒன்றைக் கண்டான். அந்த எலி அவனைக் கண்டு ஓடவில்லை. அவனைக் குறுகுறு என்று பார்த்தது. ஆ... எலி நம்மைப் பார்த்து ஓடாமல் நம்மையே பார்க்கிறதே என்று அதிசயப்பட்ட அதனருகில் சென்றான். அதன் பார்வையில் மாற்றமில்லை. மலர்மணனுக்கு அதிசயமாகப்பட்டது. அவனது மதிய உணவுக்காக அவன் அம்மா மதிவதனி கொடுத்தனுப்பிய உணவிலிருந்து மிகச்சிறிய பகுதியை அந்த எலியின் அருகில் வைத்தான். எலி உணவருகில் வந்தது. உண்டது. உண்டு முடித்து எழுந்தது. ஓடிப்போய் விட்டது. மலர்மணன் மகிழ்ந்து போனான். உயிர்கள் அன்புக்கு எப்படியெல்லாம் பணிகின்றன. நாமும் இந்த அன்புக்காக எப்படியெல்லாம் நடந்து கொள்கிறோம். அந்த நடவடிக்கைகள் நம்மை எப்படியெல்லாம் மகிழ்வுறச் செய்கிறது. என்று நினைத்துக் கொண்டே கல்லூரி சென்றான். அந்த எலியின் நினைவு அடிக்கடி அவன் அகத்தில் நின்று ஆனந்தக் கூத்தாடியது.

மாலையில் மறுபடியும் அவ்வழியே சென்றான். ஒரு சிறிய கருப்பட்டித் துண்டை கடையிலே வாங்கிக்கொண்டுதான் சென்றான். ஏனெனில் அந்த எலிக்குக் கொடுக்க. ஆனால் ஏமாற்றம்தான் மிஞ்சியது. மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டான். அடுத்த நாள் பார்த்துக் கொள்ள லாம் என்று



நடந்தான். அடுத்த நாளை அவனது மனம் விரும்பியது. மிகவும் மெதுவாகப் போனது அந்த நாள். அடுத்த நாள் சென்றான் எலியைக் கண்டான், உணவு கொடுத் தான். உணவை எலி உண்டது. இது தொடர் கதையாகிப் போனது. இவர்களது நட்பு இரண்டு ஆண்டு களை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சமூக நலப் பித்தனாகிப்போன மலர் மணனுக்கு இன்றையநாள் உலக வரலாற் றில் ஒரு ஒப் பற்ற நாள்.



உலக உயிர்கள் அனைத்திற்கும் அன்புதான் உயர்ந்த மகிழ்ச்சி என்பதை அவர் உணர்ந்து கொண்ட நாள். இன்று அவன் எலிக்கு உணவு கொடுக்கச் சென்ற போது அவன் கொடுத்த உணவை அது உட்கொள்ள வில்லை. மெதுவாக நடந்தது. மலர்மணனுக்கு வியப்பாக இருந்தது. மேலும் உணவை உண்ணாமல் போகிறதே என்று வருத்தப் பட்டான்.

உலக உயிர்கள் அனைத் திற்கும் அன்புதான் உயர்ந்த மகிழ்ச்சி என்பதை அவர் உணர்ந்து கொண்ட நாள். இன்றுஅவன் எலிக்கு உணவு கொடுக்கச் சென்ற போது அவன் கொடுத்த உணவை அது உட்கொள்ள வில்லை. மெதுவாக நடந்தது. மலர் மணனுக்கு வியப்பாக இருந் தது. மேலும் உணவை உண்ணாமல் போகிறதே என்று வருத்தப் பட்டான் அதைப் பின்தொடர்ந் தான். இவனைத் திரும்பிப் பார்த்த எலி இன்றும் வேகமாக நடந்தது. அவனும் அதைத் தொடர்ந்தான். ஓடியது அவனும் ஓடினான். அவனது கண்ணில் படும்படியாகவே ஓடியது. ஒரு புதரருகே போய் நின்றது. மெதுவாக நடந்தது. ஒரு எலி வளைக்கு அருகில் நின்றது அது நின்ற இடத்திலிருந்து வளை வரை வட்ட வட்டமாக காசுகளைப்போல் ஏதோ கிடந்தது. அந்த எலி வளைக்குள் ஓடியது. உடனே வெளியில் வந்தது போனவாறே வரவில்லை. தனது அழகிய பற்களால் ஒரு நாணயத்தைக் கொண்டு வந்தது. அந்த நாணயம் மின்னியது.

அதை ஏற்கெனவே மண் எறிப்போயிருந்த ஒரு காசின்மேல் போட்டது மலர்மணனின் வியப்பிற்கு அளவே இல்லை புரிந்து கொண்டான். அவைகள் பொற்காசுகள். உள்ளே இன்னும் இருக்கிறது என்பதை நமக்கு எலி உணர்த்தி யிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். அருகே சென்று வளையைப் பெரிதாக் கினான். காசுகள் கிடந்தன.

அந்த எலி வேகமாய் விரைந்தது. மலர் மணன் பொற்காசுகளை விட்டு விட்டு, எலியைப் பின் தொடர்ந்தான். புறப்பட்ட இடத்திற்கே எலி திரும்பியது. மலர்மணன் கொடுத்த உணவை ஆற அமர உட்காந்து சாப் பிட்டது. மலர்மணன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

உணவை உண்டபின் ஓடி விட்டது எலி. மலர்மணன் வீட்டிற்கு வந்தான். தாய் மதிவதனியிடம் வியந்து கூறினான். இறைவனின் படைப்புகளையும் அவைக ளிடம் உள்ள அன்பையும் தாயும் மகனும் பேசினர். பின்னர் மலர்மணன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் சென்றான். ஒரு இடத்தில் புதையல் பார்த்தேன் வாருங்கள் என்றான். மலர்மணனின் சேவைகளை அறிந்தி ருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவனது அழைப் புக்கு மதிப்பளித்து சில அதிகாரிகளையும் தொழிலாளர்களையும் அழைத்துச் சென்றார்.

மலர்மணன் காட்டிய இடத்தைத் தோண்டினர். பழங்கால தங்க நாணயங்கள், ஆபரணங்கள், இரத்தினங்கள் என்று அங்கே அதிக விலை மதிப்புடைய பெரும்புதையல் கண்டெடுக்கப் பட்டது மலர்மணனை அனை வரும் பாராட்டினர். மாவட்ட ஆட்சித் தலைவரோ மலர்மணனிடம் ஒரு தேதியைச் சொல்லி, அந்தத் தேதியில் உங்களுக்குப் பாராட்டு விழா எற்பாடு செய்திருக்கிறோம். முதல்வரே உங்களுக்குப் பரிசு தர இசைந்திருக்கிறார் என்றார். ஒப்புக் கொண் டான். அந்த நாளும் வந்தது. தனது அன்பனான எலிக்கு உணவு கொடுத்தான், விழா அரங்கு சென்றான். தனது நண்பனான எலியைப் பற்றிச் சொன் னான். நம்ப முடியாமல் நம்பியது கூட்டம். அங்கே உயிர்களிடத்தில் அன்பு செலுத்தினால் புதையலும் கிடைக்கும் என்ற புதுப்பாடம் நடத்தப்பட்டது. ◆

# எலுமிச்சை இட்லி (லெமன் இட்லி)

<u>தேவையானவை:</u>

இட்லி மாவு ஒரு கப்

உளுத்தம் பருப்பு அரை டீஸ்பூன்

கடலைப்பருப்பு சிறிதளவு

கடுகு ஒரு டீஸ்பூன்

உப்பு தேவையான அளவு

எலுமிச்சைப் பழம் பாதி

கறிவேப்பிலை சிறிது

மஞ்சள் தூள் அரை ட்டீஸ்பூன்

எண்ணெய் லெமன் இட்லி

பொரிக்கும் அளவிற்கு

<u>செய்முறை</u>

இட்லிமாவில் மஞ்சள் தூள் சேர்த்து மினி இட்லி தயாரிக்கவும். எண்ணெய் சூடாக்கி, கடுகு உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு தாளித்து தேவைப்பட்டால் உப்பு சேர்க்கவும் (இட்லியில் ஏற்கனவே உப்பு இருக்கும்) தாளித்தால் இட்லி சேர்த்து நன்கு பிரட்டி எடுத்துப் பரிமாறவும்.

கார்த்தி மெஸ்

கூட்டேரிப்பட்டு

